# ஸ்ரீ சப்த கன்னிகள்
# திருவருள் ஓசை

சிறப்பு மலர் வெளியீடு



புத்தூர் கிழக்கு, வீரவாணி,

**திருவருள்மிகு ஸ்ரீ நாச்சிமார் சப்தகன்னி திருக்கோவில்**

**04-04-2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தூர் கிழக்கு, வீரவாணி,

திருவருள்மிகு ஸ்ரீ நாச்சிமார் சப்தகன்னி திருக்கோவில்

புனராவர்த்தன அஷ்டபந்தன ஸப்ததச (17) குண்டபக்ஷ

மஹா உத்தமயாக பிரதிஷ்டா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(விகிர்தி வருடம் பங்குனித்திங்கள் 10ஆம் நாள் 24.03.2011 வியாழக்கிழமை
காலை 09.18 மணி முதல் 10.45 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்
நடைபெற்ற **மஹாகும்பாபிஷேக**

# ஸ்ரீ சப்த கன்னிகள் திருவருள் ஓசை

## சிறப்பு மலர் வெளியீடு

## 04-04-2011

**பங்குனித்திங்கள் 21ஆம் நாள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இந்துமா கடலின் நடுவே முத்தெனத் திகழும் இலங்கைத் திருநாட்டின் எழில் வளமும் பொங்கும் வடமாகாணத்திற் சைவமும் தமிழும் கழைத்தெழில் கொஞ்சும் புத்தூர் கிழக்கு, வீரவாணிப் பதியில் நமக்கெல்லாம் அருள் பாலிக்கும் அருவுருவத் திருமேனியாகிய நாச்சிமார் சப்த கன்னியராக எழுந்தருளியிருக்கும் ஜெகன் மாதா மனோன்மணி அம்பாளுக்குத் திருப்பணிகள் யாவும் சிறப்பாக நிறைவு பெற்று மஹா கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகப் பூர்த்தியாகிய இன்று ஸ்ரீ சப்தகன்னிகள் திருவருள் ஓசை என்னும் மணம் கமழும் மலர் சிறப்பாக வெளிவருவது அன்னையின் திருவருளும், குருவருளுமாகும். நாச்சிமார் சப்தகன்னிகளின் பாதாரவிந்தங்களிற்கு இம்மலரைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

**வீரவாணி**
**புத்தூர் கிழக்கு**

**கும்பாபிஷேக மலர்க் குழுவினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் ஓசையாக.....



| | | |
|---|---|---|
| 1) | சர்வபோதகாசிரியரின் ஆசியுரை | 01 |
| 2) | கும்பாபிஷேக பிரதமகுருவின் ஆசியுரை | 02 |
| 3) | நல்லைக் குருமணியின் அருளாசிச்செய்தி | 03 |
| 4) | சர்வசாதகாசிரியரின் ஆசியுரை | 04 |
| 5) | தர்மகர்த்தாவின் வாழ்த்துரை | 05 |
| 6) | ஆலயப் பிரதமகுருவின் ஆசியுரை | 06 |
| 7) | நிர்வாகசபைத் தலைவரின் ஆசிச்செய்தி | 07 |
| 8) | தர்மகர்த்தாசபைச் செயலாளரின் வாழ்த்துரை | 09 |
| 9) | துணைவேந்தரின் வேண்டுதல் | 10 |
| 10) | பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி | 11 |
| 11) | கிராமஉத்தியோகத்தரின் வாழ்த்து | 12 |
| 12) | வாழ்த்துரை | 13 |
| 13) | காப்பாளரின் வாழ்த்துரை | 14 |
| 14) | சப்த கன்னிமார் திருவருள் ஓசை | 15 |
| 15) | வாழ்த்துச்செய்தி | 16 |
| 16) | நல்லாசியும் வாழ்த்தும் | 17 |
| 17) | ஓய்வுபெற்ற அதிபரின் வாழ்த்துரை | 18 |
| 18) | பொருளாளரின் வாழ்த்துரை | 19 |
| 19) | ஆசிரியகலாசாலை விரிவுரையாளரின் ஆசிச்செய்தி | 20 |
| 20) | திருக்கோவில் வரலாறு | 22 |
| 21) | திருஊஞ்சற் பாமாலை | 25 |
| 22) | அபிராமி அந்தாதி | 30 |
| 23) | நவரத்தின மாலை | 43 |
| 24) | குடமுழுக்கு விழா | 48 |
| 25) | சிதறுதேங்காய் | 50 |
| 26) | எமது கிராமத்திலுள்ள இந்து ஆலயங்கள் | 51 |
| 27) | கும்பாபிஷேகக் குருமார்கள் விபரம் | 54 |
| 28) | திருக்கோயில் தர்மகர்த்தா சபையினர் | 56 |
| 29) | எஞ்ஞான்றும் நன்றி | 58 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தூர் கிழக்கு, வீரவாணி

# திருவருள்மிகு ஸ்ரீ நாச்சிமார் சப்தகன்னி திருக்கோவில்



திருச்சிற்றம்பலம்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்(கு)ஒருதீங்கில்லையே

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தூர் கிழக்கு, வீரவாணி, சப்தகன்னி நாச்சிமார்
அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாவை
முன்னிட்டு வழங்கிய



# வாழ்த்துரை

மேற்படி ஆலயத்தைத் திறம்பெறப் புனருத்தாரணம் செய்து ஸப்ததச குண்டபக்ஷ உத்தமயாக கும்பாபிஷேகம் நிகழ்ந்ததையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

நாஸ்திகமே மேலோங்கி நிற்கின்ற இக்காலத்தில்; இவ்வாலயத்தைத் திறம்படப் புனருத்தாரணம் செய்து, மகாகும்பாபிஷேகத்தை நடாத்துவித்த ஆலய தர்மகர்த்தா சபையினரும், இக்கும்பாபிஷேகத்திற்குப் பிரதம குருவாகத் தலைமை தாங்கி ஆகமக் கிரியைகளைச் செவ்வனே நடாத்திவைத்த சிவாகமக் கிரியா சிரோன்மணி சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக் குருக்கள் அவர்களும், குருக்கள் அவர்களுக்கு உறுதுணையாக நின்ற ஏனைய குருமார்களும், சாதகர்களும், உதவியாளர்களும் ஆகிய எல்லோர்களும், மேன்மேலும் இத்தகைய சிவ கைங்கரியங்களைச் செய்து, சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துவதோடமையாது; இவர்களனைவருக்கும்

"வன்திறல் மிகுத்திடுக வாகை பெரிதாக
இன்றியமையாத வளனெய்துக" என மண்டலாபிஷேகப் பூர்த்தியாகிய இன்று சப்தகன்னிகள் திருவருள் ஓசை என்னும் மலர் இன்று வெளிவரும் நன்நாளில் ஆலய ஆதீன கர்த்தாவுக்கும், அம்பாளின் மெய்யடியார்களுக்கும் எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க.

சுபமஸ்து

சித்தாந்த சைவப்புலவர் ம.ச.வேதாரணியக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேக பிரதமகுருவின்

# ஆசியுரை



சிவாகமங்களிலே கூறப்பட்ட கிரியைகளுடன் இசைவுறும் சமயாசாரச்சடங்குகளுடன் வாழும் ஆசார சீலர்கள் அனைவர்களும் ஒன்றுசேர்ந்து கற்றோர் மீக்கூடும் இடம் புத்தூர் கிழக்கு, வீரவாணி பதியாகும். முன்னோர்கள் காலம் காலமாகப் பேணிய சப்தகன்னியரின் திருவருள் சக்தியாகிய நாச்சிமார் சப்தகன்னி ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கு ஆகமமுறைப்படி புனராவர்த்தன அஷ்டபந்தன ஸப்ததச குண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகம் நிகழ்ந்தேறியது அன்னையின் திருவருளாகும். அம்பிகையின் கும்பாபிஷேகத்திற்கு அனைத்து வழிகளிலும் அடியேனுக்கு உறுதுணையாக இருந்த சர்வபோதகாசிரியர்கள், சர்வசாதகாசிரியர்கள், மூர்த்திபசிவாச்சாரியர்கள், யாகசம்ரட்சகர்கள், ஆலய பிரதமகுரு, ஆதீனகர்த்தா நா.நவரத்தினம் குடும்பத்தினர், தர்மகர்த்தா சபையினர், அம்பிகையின் மெய்யடியார்கள், உலகத்தில் வாழும் அனைத்து ஜீவராசிகளுக்கும் அன்னையின் அருள் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திக் கின்றேன். மண்டலாபிஷேகப் பூர்த்தி நாளாகிய இன்று ஸ்ரீ சப்தகன்னிகள் திருவருள் ஓசை என்னும் மலர் இன்று வெளிவருவதையிட்டு மனம் மகிழ்ச்சியடைந்து ஸ்ரீ சப்தகன்னிகள் திருவருள் ஓசை மலர் மணம் உலகெங்கும் மணம்வீச அடியேன் நாச்சிமார் சப்தகன்னியின் பாதம் தொட்டு பிரார்த்திக்கின்றேன். இறை சங்கமம் ஓங்குக; சுபமங்களம் நிறைகுக; வளம் யாவும் பெருகுக.

சுபம்

*சிவாகம கிரியா கலாநிதி, ஆகமக்கிரியா தத்துவநிதி*
*கிரியாக்கிரமஜோதி, சிவாகமவித்தகர், அருள்ஞானக்கிரியாமணி,*
*சிவாகம கும்பாபிஷேக கிரியா திலகம்,*
**சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக்குருக்கள்,**
*பிரதமகுரு, நிருவத்தம்பை தான்தோன்றி விநாயகர் திருக்கோவில்,*
*ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோவில், கொம்மந்துறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய ஆதீனகர்த்தா சப்தகன்னிகளுக்கு எண்ணெய்க்காப்புச் சாத்தும் வைபவம்...



பிரதான யாகசாலையில்
நாச்சிமார் சப்த கன்னியின் பிரதான கும்பம்



ஆலய ஆதீனகர்த்தா அவர்களின் மகள் பா.ரஞ்சினிதேவி
உற்சவ மூர்த்திக்கு எண்ணெய்க்காப்புச் சாத்தும் வைபவம்...



பிரதான குண்டத்தில் அக்கினி வளர்க்கப்படும்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச் செய்தி



அம்பிகை அடியார்களுக்கு,

வீரவாணி, சப்த புத்தூர் பிரதேசத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் கன்னிமார் அம்பாளுக்குக் கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. எங்கும் பரந்து விரிந்து இருக்கும் அம்பிகை "வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு" இவ்வாலயத்திற் கன்னிமார் அம்பிகையாக எழுந்தருளியுள்ளார். அம்பிகையின் வழிபாடு உயிரினத்திற்கு மேன்மை தருவதாகும். தாயின் அன்பைப் பெறாத உயிர்கள் இவ்வுலகில் இல்லை. இதனையே அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம் என்பது முன்மொழியாகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இவ் ஆலயத்தில் நடைபெறுவது இங்குவாழும் மக்களுக்கும், ஊருக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் இறைவனை வழிபாடு செய்து வாழ்வதே உயர் நிலையாகும். இதனை உணர்த்தும் நம்மவர்கள் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற வாக்கிற்கமைய அம்பிகைக்கு ஆலயம் அமைத்து வழிபாடு ஆற்றுகின்றனர். அம்பிகையின் பூரணமான அருளைப் பெற; இக்கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசனம் பண்ணி, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!

புண்ணியச் செயலை ஆற்றும் ஆலயபரிபாலனசபையினருக்கும் சிவாச்சாரிய பெருமக்களுக்கும், ஊர் மக்களுக்கும் அம்பிகையின் அன்பு கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

"இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சர்வசாதகாசிரியரின்

# ஆசியுரை

புத்தூர் கிழக்கு வீரவாணி நாச்சிமார் சப்தகன்னிகள் ஆலயப் புனராவர்த்தன அஷ்டபந்தன ஸப்ததச குண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் அன்னையின் திருவருளினால் மிகவும் சிறப்பான முறையில் நிறைவு பெற்றுள்ளமை அன்னையின் திருவருளேயாகும். கும்பாபிஷேக நிகழ்வில் அடியேன் சர்வசாதகாசிரியராக இருந்து குடமுழுக்கின் ஆகமங்களுக்கு அமைவாக 64 கிரியைகளும் நிறைவுபெற்று மண்டலாபிஷேக பூர்த்தியாகிய இன்று அம்பாளுக்கு 1008 சங்குகளால் அபிஷேகம் நடைபெற்று ஸ்ரீ சப்தகன்னிகள் திருவருள் ஓசை என்னும் மலர் இன்று வெளிவரும் இவ்வேளையில் அடியேன் எனது நல்லாசிகளைத் தெரிவிப்பதில் ஆத்ம திருப்தியடையும் வேளையிற் ஆலயப் பிரதமகுரு, கும்பாபிஷேகப் பிரதமகுரு, ஏனைய சிவாச்சாரியார்களுக்கும் ஆதீன ர்த்தா, தர்மகர்த்தாசபையினர், அம்பாளின் அடியார்களுக்கும் அம்பிகையின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

*சர்வசாதகாசிரியர்,*<br>
*சாதகஞானபானு, சாதகசிரோன்மணி, கும்பாபிஷேகக் கிரியாஜோதி*<br>
*சிவஸ்ரீ நா.கேதீஸ்வரக்குருக்கள்,*<br>
*பிரதமகுரு, அநுராதபுரம் கதிரேசன் கோயில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மகர்த்தாவின்

# வாழ்த்துரை



எனது பிறப்பிற்கு முற்பட்ட காலத்திலிருந்து பூட்டனார், பேரனார், தந்தையார் பராமரிப்பிலிருந்து வந்த எங்கள் குலதெய்வமான சப்தகன்னிமார், நாச்சிமார் மரத்தடியில் இருந்த கல்லில் தோன்றிப் பல அற்புதங்கள் நிகழ்த்தி வந்தனர். சிறிது காலத்தின்பின் சூலம் நாட்டப்பட்டு, சிறிது காலத்தின்பின் சிறு கொட்டில் அமைத்து வழிபடத் தொடங்கி இக்காலத்திற் பல புதுமை நிகழ்ந்ததாக மூதாதையர்கள் கூறினார்கள். பின் 1953 நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டு இருந்த காரணத்தினால் மரபுவழியாக நாங்களே பூசை செய்து வந்தோம். அதனைத் தொடர்ந்து தொழிலின் நிமித்தம் வெளியே சென்றபோது பல கஷ்டங்களையும், பல சோதனைகளையும், பல வேதனைகளையும், பல புதுமைகளையும் தனது இஷ்ட சித்திகளை அருளியதன் பலனாக 1983ஆம் ஆண்டு புதிய கட்டடம் அமைக்கப்பட்டு மூன்று நேரப் பூஜைகள் பிராமணர்களாற் செய்யப்பட்டது. கிராம மக்கள் எல்லோரும் விசேட பூசைகள் எல்லாவற்றையும் கண்டுகளிக்க ஆவன செய்து, நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பொலிவிழந்துள்ள கோயிலை பொலிவுடன் ஆக்கிப் புதிதாக நிர்மாணம் செய்து அதற்கு சக்தி கொடுத்து கும்பாபிஷேகத்தின்பின் எல்லோரும் இஷ்டசித்திகளைப் பெற அம்பாளின் அருள் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். மண்டலாபிஷேக பூர்த்தி தினத்தில் "சப்த கன்னிமார் திருவருள் ஓசை" என்னும் மலர் வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

நா.நவரட்ணம்,
வாதரவத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப் பிரதமகுருவின்

# ஆசியுரை



புத்தூர் கிழக்கு, வீரவாணிப் பதியில் வேண்டுவார்க்கு வேண்டுவன வாரி வழங்கும் திருவருள்மிகு நாச்சிமார் சப்தகன்னி அம்பாளின் மஹா கும்பாபிஷேகம் நிறைவுபெற்று மண்டலாபிஷேக பூர்த்தியாகிய இன்று ஸ்ரீ சப்தகன்னிகள் திருவருள் ஓசை என்னும் மலர் மிகக் குறுகிய காலத்தில் வெளிவருவது அன்னையின் திருவருளேயாகும். அம்பாளின் கும்பாபிஷேகத்தைச் சிறப்பான முறையில் நிறைவுசெய்த குருமார்களுக்கும், ஆலய ஆதீனகர்த்தாவுக்கும், தர்மகர்த்தா சபையினருக்கும் அம்பாளின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சமஸ்த சன் மங்களானி சுகினோ பவந்து

ஆலயப் பிரதமகுரு
*சிவஸ்ரீ பா.உருத்திரபாலன் ஐயா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகசபைத் தலைவரின் ஆசிச்செய்தி



ஸ்ரீ சப்த கன்னிகள் திருவருள் ஒசை மலர் வெளியீடு

ஈழமணித் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில், புத்தூர் கிராமத்தின் கீழ்த்திசையில், உப்பாற்றங்கரையோரத்திலேயுள்ள கோயில்கள் நிறைந்து அருள்பாலிக்கும் வாதரவத்தைப் பதியின் தென் எல்லையிலுள்ள வீரவாணிப் பகுதியிலிருந்து அருள்பாலிக்கும் சப்த கன்னிமார் (நாச்சிமார்) ஆலயம் இன்று இரண்டாவது தடவையாக மஹா கும்பாபிஷேகம் காண்பதிற் பெருமகிழ்வடைகின்றோம்.

1898ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வேப்பமரத்தடியில் முன்னோரால் வழிபடப்பட்டு வந்த இந்த ஆலயத்தைத் தர்மகர்த்தா நா.நவரத்தினம் அவர்களால் பொறுப்பேற்கப்பட்டு நிரந்தர மூலப்பொருட்களாற் கட்டப்பட்டது. பின்னர் 1984இல் ஆலயம் மீளவும் புனரமைக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டது. பல்வேறு அற்புதங்களைப் புரிந்து எம் மக்களை நல்வழிப்படுத்திய சப்த கன்னிமார் (நாச்சிமார்) ஆலயம் கடந்தகால அனர்த்தங்களாற் பாதிக்கப்பட்டிருந்தது. இவ் ஆலயத்தைப் புனரமைக்கும் நோக்குடன் 2008ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20ம் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆலயம் முற்றாக இடிக்கப்பட்டது. இதற்கான புனரமைப்பைத் தர்மகர்த்தா நா.நவரத்தினம் அவர்கள் தனது நோயையும் பாராது தனது சொந்தச் செலவிலும், பொதுமக்களின் பங்களிப்பு இருந்தால் அதையும் ஏற்கும் நோக்குடன் நிர்மாண வேலைகளை ஆரம்பித்தார். பிரகாரம் கிழக்கு நோக்கிய கருவறையில் மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசன மண்டபம் ஆகியனவும், பரிவார மூர்த்திகளான பிள்ளையார், சந்தானகோபாலர், முருகன், சப்த கன்னிமார், வீரபத்திரர், வைரவர் ஆகியவற்றுக்கு தனித்தனி சந்நிதிகளாகவும், பொளி கல்லாற் கட்டப்பட்டதுடன் மடப்பள்ளி, மணிக்கூட்டுக் கோபுரம் என்பனவும் புனரமைக்கப்பட்டு சிறப்புற வர்ணம் பூசப்பட்டு விகிர்தி வருடம் பங்குனித்திங்கள் 10ஆம் நாள் வியாழக்கிழமை (24-03-2011) அன்று நாச்சிமாருக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் இரண்டாவது மஹா கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றது. இவ் மகாகும்பாபிஷேகத்தைச் சிறப்பிக்கும் முகமாக மண்டலாபிஷேக பூர்த்தி தினமான இன்று " ஸ்ரீ சப்தகன்னிகள் திருவருள் ஓசை " என்னும் நூலை வெளியிட்டு வைப்பதிற் பெருமகிழ்வடைகின்றோம். கும்பாபிஷேகத்திற்கு முன்னேற்பாடாகத் தனது சிரமத்தையும், வேலைப்பாடுகளையும் பாராது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவானவராக இருந்தும் எம்முள் ஒருவராக நின்று 45 நாட்கள் யந்திரபூஜையையும் நிகழ்த்திக் கும்பாபிஷேகத்தையும் நடத்திவைத்த கும்பாபிஷேகப் பிரதமகுரு சிவாகமகிரியா கலாநிதி, சிவாகம வித்தகர், சிவபதி இ.பாலகிருஷ்ணக்குருக்கள் அவர்களுக்கு ஆலய நிர்வாக சபையினரின் சார்பிலும், ஆலய தர்மகர்த்தாவின் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இவருக்கு எமது சார்பிற் 'கும்பாபிஷேக சிவாகமகிரியாதிலகம்' என்னும் பட்டத்தை வழங்கி கௌரவிக்கின்றோம். மேலும், பிரதம குருக்களுக்கு ஒத்தாசை புரிந்த அனைத்துக் குருக்களுக்கும் சிவாச்சாரியார்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் எமக்கு பல்வேறு வசதிகளில் ஒத்துழைப்பு வழங்கிய எமது கிராம சேவையாளர் திரு ஐ.சிவானந்தம் அவர்களுக்கும், பிரதேச செயலர், கலாச்சார உத்தியோகத்தர் ஆகியோருக்கும், ஆலய நித்திய பூஜைகளைச் செய்து எமக்கு ஒத்துழைப்பு நல்கும் சிவஸ்ரீ பால.உருத்திரபாலன் ஐயா அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் ஆலயத்தை மிக விரைவாக அமைத்துத்தந்த கலைஞர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். அந்த வகையிற் பொழிகற்கட்டுமான வேலைகளை பே.இராசரத்தினம் (சின்னக்கிளி) அவர்களுக்கும் பண்டிகை வேலைகளை அராலியூர் கி.நவரத்தினம் மகன் ரூபன் அவர்களுக்கும் சிற்ப வேலைகளை அராலியூர் தி.விஜயசிறி சந்திரன் ஆச்சாரி அவர்களுக்கும், எழுந்தருளி திருவுருவை வண்ணார் பண்ணை மோகன் அவர்களுக்கும், கலசம், திருவாசி வேலைகளை அகிலன் அவர்களுக்கும், கோப்பிச வேலைகளை நீர்வேலி கி.ஈஸ்வரபாதம் அவர்களுக்கும், வர்ண வேலைகளை றஞ்சன் (புத்தூர்), மதன் (கோண்டாவில்) ஆகியோருக்கும் நிர்மாண வேலைகளை மணியம் (புத்தூர்) அவர்களும், கேற் அன்பளிப்புச் செய்த விஜயன் (ஆவரங்கால்) அவர்களுக்கும், கேற் வேலைகளைச் செய்த அ.திருநாவுக்கரசு (ஆவரங்கால்) அவர்களுக்கும் தன்னையே அர்ப்பணித்து அனைத்து வேலைகளுக்கும் நிதியுதவி புரிந்த தர்மகர்த்தா நா.நவரத்தினம் அவர்களுக்கும் ஒலியமைப்புச் செய்த நாதன் சவுண்ட் (சிறுப்பிட்டி) அவர்களுக்கும், ஒளியமைப்புச் செய்த பிரகாஷ் (திருநெல்வேலி) அவர்களுக்கும், மூர்த்தி அலங்கார வேலைசெய்த சிவராஜா ஐயா(புத்தூர்) அவர்களுக்கும், சிவசக்தி பந்தல் சேவையினருக்கும் (மணி) மேலும் கும்பாபிஷேக முகூர்த்த பத்திரிகை; கும்பாபிஷேக மலர் போன்றவற்றை, சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் மற்றும் எமக்கு, பல்வேறு வழிகளில் உதவி செய்த அனைவருக்கும் நிர்வாக சபையினரின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மு.பாரதிதாசன்,
தர்மகர்த்தாசபைத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



வாதரவத்தை, வீரவாணி சப்த கன்னிகளின் தேவஸ்தானத்தின் செயலாளர் என்ற வகையில் இவ்வாலய அபிவிருத்திப் பணிகளை மேற்பார்வை செய்து உழைத்தவன் என்ற வகையில் வாழ்த்துரை வழங்குவதிற் பெருமகிழ்வடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் இரு கண்கள்: கல்வி நிறுவனமும், ஆலயமும் ஆகும். இன்றைய வாழ்க்கை முறையிற் கல்வி நிறுவனமும் ஆலயமும் ஒன்றோடுஒன்று இணையவேண்டிய தேவையுள்ளது. எமது வாதரவத்தைக் கிராமத்தின் அபிவிருத்திக்கு ஆலய தர்மகர்த்தா திரு.நா.நவரட்ணம் அவர்கள் தனது பொருளுதவியினையும், சரீர உதவியினையும் மேற் கொண்டுள்ளார். இவ்வளவு பெருமனம் படைத்த ஆலய தர்மகர்த்தாவை, செயலாளர் என்ற வகையிற் பாராட்டி வாழ்த்துகின்றேன். அவருடைய இச்சேவை இக்கிராமத்தின் தேசத்தின் ஒவ்வொரு குடிமகனுக்கும் இவ்வாலயத்தின் பணிகளூடாக முழுமையாகச் சென்றடையும். "வான்புகழ் ஓங்க, வையகம் வாழ, அருள்பாலிக்கின்ற வாதரவத்தை, வீரவாணி சப்தகன்னி நாச்சிமார் அம்பாளின் அருள் யாவருக்கும் கிடைக்கவேண்டும் என்று இறைவனை பிரார்த்திப்பதோடு இவ்வாலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வுகளை முன்னின்று நடாத்திய சிவசிறி இ.பாலகிருஷ்ணகுருக்கள் அவர்கள், ஆலய பரிபாலன சபையினால் சிவாகம கும்பாபிஷேக கிரியா திலகம் என்ற பட்டத்தினைப் பெற்றுள்ளவகையில் அவரை, பாராட்டி வாழ்த்துவதிற் பெருமகிழ்வடைவதோடு ஏனைய குருமார்கள், ஆலய பணிகளை முன்னின்று நடாத்தியவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்தி எல்லாம்வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து அருள் வேண்டி அமர்கின்றேன்.

நன்றி

சி.ரவிதாசன்,
செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவேந்தரின் வேண்டுதல்



தாய்த் தெய்வ வழிபாட்டின் எழுச்சியும், வளர்ச்சியும் எங்கள் கிராமங்களின் உயிர்ப்புடன் இரண்டறக் கலந்துள்ளது. இந்த வகையில் வீராவணி நாச்சிமார் கோயிலின் பெருங்குட முழுக்கு, புத்தூர் மக்களுக்கு மட்டுமன்றிச் சூழ்ந்த நம் கிராமங்கள் அனைத்திற்கும் புதிய வல்லமைகளையும் நம்பிக்கையையும் தருகின்றது.

வீரவாணி சப்த கன்னிமார் வழிபாடு தொன்மையானது. ஆலய வரலாறு பேசும் அற்புதங்கள் பல. குடியேற்ற நாட்டாதிக்கக் கால நெருக்கடிகளிடையேயும் இவ்வழிபாட்டு மரபு காக்கப்பட்டது.

இன்றும் எழிலுடன் விளங்கும் வேப்பமர நிழலில் நாச்சிமாரின் அடையாளமாக சூலத்தினை நாட்டி சின்னத்தம்பி ஐயா தொடங்கிய கோயில் இன்று புதிதாய் நிமிர்கின்றது. இந்நாள் வரை கோயிலின் வளர்ச்சியில் துணையாகிய அத்தனைபேரும் நாம் போற்றுதற்குரியவர்கள். இந்நாள் அறங்காவலராய் அழிவுகளின் தடம் அகற்றி அழகு காக்கும் திரு. நவரத்தினம், ஆலய நிர்வாக சபைக்குத் தலைமை தாங்கும் திரு. பாரதிதாசன் மற்றும் சபை உறுப்பினர் அனைவரும் நம் பாராட்டுக்குரியவர்.

'அம்மா, அம்மா... என்று தொழுது நிற்கும் அடியவர் வாழ்வில் நல்லன எல்லாம் நிறைந்திடவும், நாச்சிமார் நல்லருளில் நாடு சிறந்திடவும் இந்நாளில் இறைஞ்சிடுவோம்.

பேராசிரியர் என். சண்முகலிங்கன்.
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதான கும்பங்கள் திருவீதி உலா வரும்போது...



பிரதான தூபிக்கு அபிஷேகம்...



ஆலய பிரதமகுரு. பிரதான கும்பத்துடன் ஆலய வாசலை வந்தடையும்போது...



மூலமூர்த்தி அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலரின்
# வாழ்த்துச்செய்தி

"உய்வாருதவு நிதி வாங்கித் திருப்பணி செய்வார் பெறுக சிவம்" என்பது சைவ சமய நெறியின் வாக்கு. இம் மரபிற்கேற்ப ஸ்ரீ நாச்சியார் அம்பாளின் அடியார்கள் திருப்பணி செய்து கும்பாபிஷேக வைபவத்தைக் காணும்பேறு பெற்றுள்ளனர்.

உலக நாயகியாகிய அம்பிகை இங்கு நாச்சியார் அம்பாளாக எழுந்தருளி; பால் நினைந்தூட்டும் தாயினைப் போலப் பக்தர்கள் வேண்டுதல் அறிந்து அருள் பாலிக்கின்றாள். பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை நடைபெறுகின்ற மகா கும்பாபிஷேகம் இத் தலத்தில் நடைபெறுவது தலத்திற்கும், ஊருக்கும், ஊர்வாழ் மக்களுக்கும் புனிதத்தைத் தருவதாகும்.

ஆலயங்கள் கும்பாபிஷேகம் காண்பது அவற்றின் பக்திச் சிறப்பையும், தெய்வ சந்நித்தியத்தையும் மேம்படுத்தும் அருட் கைங்கரியமாகும். இதன் காரணமாக ஆலயம் மேலும் தெய்வீகப் பொலிவு பெறுவதுடன் வணங்கவரும் பக்தர்களின் உள்ளங்களையும் வளப்படுத்தி அருள் சுரக்கும் நிலையமாகத் திகழும்.

இப்பிரதேச மக்களினால் நன்னோக்கம் கொண்டு நிறைவேற்றுகின்ற இக் கும்பாபிஷேகம் சகல வகையாலும் மேன்மையுற்று விளங்கவும், யாவரும் கேளிர் என்ற உறவு உணர்வோடு கூடிய இன்ப வாழ்க்கை சிறந்து விளங்கவும் வீரவாணி ஸ்ரீ நாச்சிமார் அம்பாள் திருவடி மலர்களை நினைந்து வாழ்த்துகின்றேன்.

ம.பிரதீபன்,
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
வலிகாமம் கிழக்கு - கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் அருட்கடாட்சம் கிடைக்கட்டும்



வலிகாமம் கிழக்கிலுள்ள புத்தூர் கிராமத்தின் கிழக்குத் திசையில் அமைந்தது வாதரவத்தைப் பகுதியாகும். வாதரவத்தையின் நான்கு திசைகளிலும் ஆலயங்கள் அமைந்துள்ளது. அந்த வகையிலே வாதரவத்தையின் தென் பகுதியிலே வீரவாணி சப்த கன்னியர் ஆலயம் அமைந்து அவ்வூர் மக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டு இருக்கின்றது. இந்த ஆலயமானது புனருத்தாரணம் செய்யப்பட்டு பரிபாலகமூர்த்திகளான பிள்ளையார், முருகன், சந்தான கோபாலர் , வீரபத்திரர், வைரவர் ஆகியோருக்கும் தனிக்கோயில்கள் அமைத்தும் அழகுடன்மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. இவ்வாலயத்திற்கு மஹாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். அதனை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலயம் என்றால் ஆன்மாக்கள் லயிக்கும் இடம் எனப் பொருள்படும். எனவே மக்கள் ஆன்மீகத் துறையில் ஈடுபடுவதற்கு நிலைக்களமாகஆலயங்கள் விளங்குகின்றன. இதன்மூலம் சமய, சமூக, கலை, கலாசார விழுமியங்களைப் பரவச் செய்யும் அரும் பணியை ஆலயங்கள் ஆற்றுகின்றன. இச்சிறந்த பணியை ஆற்றும் ஆலயங்களைப் புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் செய்தல் நமது கடமையாகும். எனவே நடைபெற இருக்கும் குடமுழுக்கு விழா சிறப்புற நிகழ சப்த் கன்னியர் அன்னையின் அருட்கடாட்சம் கிடைக்க வாழ்த்துகின்றேன்.

ஐ. சிவானந்தம்
கிராம உத்தியோகத்தர்
வாதரவத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகவிழா இனிது நிறைவேறிட
## அன்னை அருள் பாலித்திடுவாள்



# வாழ்த்துரை

அம்பிகை மெய்யடியார்களே!

வாதரவத்தை தெற்கு வீரவாணியில் எழுந்தருளியிருந்து அருள்புரியும் சப்த கன்னிமார் அம்பாளிற்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமைக்குரிய இவ் ஆலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேகம் ஊருக்கும், மக்களிற்கும், ஆலயத்திற்கும் வீரத்தை ஏற்படுத்துகின்றது. ஆலயம் இன்று பல சிறப்புக்களுடன் உயர்நிலையை அடையச் செய்கின்றது. பன்னிரண்டு வருடங்களிற்கு ஒரு தடவை நடைபெறும் கும்பாபிஷேகம் இவ் ஆலயத்தில் நடைபெறுவது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றது. இக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதையிட்டு அம்பிகையின் அருள் எல்லோரிற்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். மண்டலாபிஷேக பூர்த்தி தினத்தில் ஸ்ரீ சப்த கன்னிகள் திருவருள் ஓசை எனும் மலர் வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தூய மந்திரபக்தி சூழலில் வீற்றிருக்கும் சப்த கன்னிமார் அம்பாள் பரமானந்த தற்பேற்றினை அனைவருக்கும் வழங்குவாள் எனவும் கும்பாபிஷேகத்தைச் செய்த குருமார்களையும், தர்மகர்த்தாவையும், ஆலயபரிபாலன சபையினரையும் மற்றும் எல்லோரையும் அம்பாள் ஆசீர்வதிப்பீராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

சி. நித்தியானந்தன்.
(ஜேர்மன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சப்த கன்னிமார் தேவஸ்தான

## காப்பாளர் அவர்களின்

# வாழ்த்துரை

பண்பாட்டுச் சிறப்பிலும், பக்தி மேம்பாட்டிலும் சிறந்து விளங்கும் கிராமம் வீரவாணி ஆகும். இத்தகைய பகுதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னையாக விளங்குபவர் அருள்மிகு சப்தகன்னிமார் ஆகும். அன்னையின் அருள் ஆட்சியினாற்றான் இவ் உலகமே இயங்குகின்றது. அம்பிகை உலக ஜீவராசிகளின் தாயாவாள். அனைத்துச் சக்தியையும் வழங்கி எம்மை வாழ்விப்பவளும் அவளே. அம்பாளை உபாசித்துப் பெரும் புண்ணியம் பெற்றோர் பலர். இத்தகைய புண்ணியத்தை வீரவாணி சப்த கன்னிமார் வாழ்மக்கள் அடைவதற்காக சப்த கன்னிமார் அம்பாள் வீற்றிருந்து அருள்கின்றாள்.

இன்று ஆலயங்கள் அனைத்திலும் குடமுழுக்கு விழா நடைபெறுவது சைவ மக்களின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும், பக்திக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். இவ்வகையில் வீரவாணி சப்த கன்னிமார் ஆலயமும் குடமுழுக்கு விழா நடைபெற்றது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும். இக் குடமுழுக்கு வைபவத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட ஆலய அறங்காவலர், சிவாச்சாரியார், கலைஞர்கள், சிற்பவேலையாளர்கள், பொதுமக்கள், அடியார்கள் மற்றும் பணிபுரிந்த அனைவரையும் வாழ்த்தி, ஆசிகூறி எம் அம்பாளின் கும்பாபிஷேகப் பெருவிழா பக்தி பூர்வமாக நடைபெறத் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

ந. பரமானந்தராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதரவத்தை தெற்கு, வீரவாணிசப்த
கன்னிமார் அம்பாள் தேவஸ்தானத்தின்
குடமுழுக்கு மலரான



# ஸ்ரீ சப்த கன்னிகள் திருவருள் ஓசை

உலகம், உயிர், இறைவன் ஆகியவற்றினுள்ளே ஊடுருவியுள்ளது பராசக்தி ஆகும். எல்லாம் வல்ல அந்த சக்திதேவியை உமை, மகாலஷ்மி வைஷ்ணவி, சாம்பவி, சப்த கன்னிமார், கல்யாணி, மகாமாரி, பவானி, கருமாரி, முண்டமாலி என்றெல்லாம் பல பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுகிறார்.

காஞ்சியில் காமாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும் வீற்றிருக்கும் அன்னை பராசக்தி புத்தூர் கிழக்கு வாதரவத்தை வீரவாணியில் சப்த கன்னிமார் வடிவமாக வீற்றிருந்துஅடியவர்கட்கு அருள் பாலிக்கின்றாள். சப்த கன்னிமார் அம்பாளின் ஆலயச் சுற்றாடல் அழகானது. இயற்கை எழில் மிக்கது. நான்கு பக்கமும் கடலாற் சூழப்பட்டிருப்பது சுற்றாடலுக்கு மெருகூட்டுகின்றது. மண்டலாபிஷேக பூர்த்தி தினத்தன்று சப்த கன்னிமார் திருவருள் ஓசை எனும் சிறப்பு மலர் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

அம்பிகையின் அருளினால் உலகெங்கும் சாந்தியும் சமாதானமும் பெற பிரார்த்திப்போமாக. கும்பாபிஷேக தரிசனம் கோடிபுண்ணியம் ஆதலினால் இக்கைங்கரிய பணிக்கு உதவியோரும் குடமுழுக்கினைத் தரிசிக்கப்பெற்றோரும் சகல மங்கலமும் பெறுவீர்களாக.

சர்வ சக்தி மயம்!

ஜெ. பத்மஸ்ரீ
லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

"ஆலயம் தானும் அரன் எனத் தொழுவோமே" என்பதற்கிணங்க ஆலயம் இறை வடிவமே ஆகும். அதனாற்றான் " கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்று பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

ஆன்மாக்கள் உய்தி பெறுதற் பொருட்டு பரம்பொருள் உருவத் திருமேனி தாங்கி ஆலயங்கள் தோறும் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்றது.

இறைவனது திருவருட்சக்தி அத்திருவுருவங்களின் தரிசனம்மூலம் ஆன்மாக்களுக்குப் பக்குவநிலை கொடுத்து இக, பர சுகங்களை நல்கின்றது.

இறையருட் சக்தியை ஏற்படுத்துவதற்கு மஹா கும்பாபிஷேகக் கிரியைகள் சிவாகமங்களில் சொல்லப்பட்ட ஆதாரங்களுடையவை.

வாதரவத்தை வீரவாணி பகுதியிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சப்த கன்னிமார் அம்பிகை இன்று கும்பாபிஷேகம் செய்யப் பெற்று திருவருட் பொலிவு பெறுகின்றார்.

இப் பெருவிழாவின் மூலம் இக்கிராமம் மாத்திரமல்லாமல் நாடு முழுவதுமே நலம் பெற வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

கும்பாபிஷேக கிரியைகளிற் கலந்துகொண்ட அந்தண சிரேஷ்டர்களுக்கும், நீண்ட காலம் பாடுபட்டுழைத்து இக்கைங்கரியத்தை நிறைவுசெய்ய உதவிய பக்தர்கள் அனைவருக்கும் இவ்வூர் மக்களிற்கும் சப்த கன்னிமார் அருட்பேறு கிட்ட வேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசிகூறுகின்றேன்.

" சர்வே ஜனாஸ் சுகினோ பவந்து"

நா. இலக்குணராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லாசியும் வாழ்த்தும்

"ஸ்ரீ சப்த கன்னிகள் திருவருள் ஓசை பக்தி மணம் பரப்பட்டும்"

சிறப்புக்கள் பெற்ற ஈழத்திருமண்ணுக்கு மணிமகுடம் சூட்டி மகிழ்வன எண்ணற்ற திருக்கோயில்கள். கோயிலில்லா ஊர் நீரில்லாக் குளத்தையும், நிலவில்லா வானத்தையும் போன்றதாகும். ஊருக்குப் பெருமை கோயில், கோயிலுக்குப் பெருமை ஊர் நலம். இவ்வகையில் வீரவாணியில் எழுந்தருளி வீற்றிருந்து திருவருள் அனைத்தும் வழங்கும் தாயாக அன்னை சப்த கன்னிமார் அம்பாள் விளங்குகின்றாள். தொன்மையும் பெருமையும் கமழும் இத் திருக்கோயிலைக் காண்போர் நலம் பெறுவர்.

அம்பாளின்திருக்குடமுழுக்குப் பெருவிழா வெகுசிறப்பாக நடைபெற்று 12தினங்கள் மண்டலாபிஷேக நாளும் சிறந்து, கும்பாபிஷேகத் திருநாளையொட்டிய "ஸ்ரீ சப்த கன்னிமார் திருவருள் ஓசை" என்கின்ற விழா மலர் தெய்வீகத் தன்மையோடும் மலர்வதற்கான அமைதியும் பெருகி வருகிறது. எல்லாம்வல்ல அம்பிகை எல்லோருக்கும் நல்லருள் கடாட்சம் வழங்கி உயர்விப்பாளாக.

S. றாதிகா
சுவிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/வாதரவத்தைப்பதி வீரவாணி ஸப்தகன்னி தேவஸ்தானம் மஹாகும்பாபிஷேகம்



# வாழ்த்துரை

அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம்பெறலாம் என்பது எமது நாட்டுச் சைவமக்களின் அசையாத நம்பிக்கை . ஸப்த கன்னியர் - ஏழுநாச்சிமார்கள் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கோயில் கொண்டதாக எமது மூதாதையினர் பேசிக்கொண்டதை இளவயதில் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

1953ம் ஆண்டில் நாகலிங்கம் நவரத்தினம் என்னும் அன்பரால் இது புனர்நிர்மாணம் செய்து சிறப்புற அமைக்கப்பட்டது.

1984ம் ஆண்டிலும் ஒரு மஹாகும்பாபிஷேகம் திருப்பணி வேலைகள் தொடர்ந்து செய்யப்பட்டது. 2000- 2008 ஆண்டுகள்வரை பொழிகல்லில் ஆலயம் புனரமைப்புச் செய்விக்கப்பட்டு புதிய மணிக்கோபுர சிறப்புக்களுடன் மீளவும் மஹாகும்பாபிஷேகம் 24.03.2011 இல் நடைபெற இருப்பது அறிந்து சைவ அன்பர்கள் மனம் மிக மகிழ்கிறார்கள்.

திருப்பணி வேலைகளை மிகச் சிறப்புறச் செய்த கலைஞர்கட்கும், வேலைகளைக் கவனித்து இனிது முடித்த பரிபாலன சபையினருக்கும், தொண்டர் வேலைகளிற் பணியாற்றியவர்களுக்கும் ஸப்த கன்னிகள் திருவருள் பெரிதும் கைகூடப் பிரார்த்திக்கின்றேன்.

கா. தருமரத்தினம்
ஓய்வு நிலை அதிபர்.
யா/வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் உற்சவத்தின் பாரம் பரிய முறை



பொங்கலிற்குரிய நாளிற்கு ஒருகிழமைக்கு முன், முதல் வெள்ளி கோவிலுக்கு விளக்கு வைத்தல் என்ற நிகழ்வு இடம்பெறும்.

கோவிலிலிருக்கும் ஆயுதங்களான; சூலம், பிரம்பு, கண்டாயுதம், அம்பு. வில், வாள், கத்தி என்பனவற்றிற்கு விசேட அபிஷேகம், விசேட பூசை என்பன நடைபெற்று, எட்டாம் நாள் இரவு இந்த ஆயுதங்கள் கோவிலடியில் இருந்து மேளம், சங்கு போன்ற ஒலியுடன் கொண்டு சென்று, ஊரின் மத்தியிலே இதற்கு ஏற்கனவே நியமிக்கப்பட்ட இடத்தில் வைக்கப்படும். கோவிலுக்குப் பொங்கும் அடியார்கள் கும்பம் வைத்துத் தெய்வம் அதில் ஆவாகனம் காண வைப்பவர்கள். புதுப்பானை, புதுநெல், அரிசி, பழவகை என்பன வெள்ளைச் சீலைவிரித்து அதிற் பரவுவார்கள். அன்று இரவு அதற்குக் காவற் பூசை செய்து, கும்பமானது தர்மகர்த்தா போன்றவர்கள் [illegible] எடுத்துச் செல்வர். புதுப்பானை காவல் செய்து ஆண்கள் சுமந்து வர, பண்டத்திற்கான மடைகளாக பழவகைகள் போன்றன வண்டியில் ஏற்றி, வண்டியின் மூலம் கோயிலுக்குக் கொண்டு வரப்படும். இதற்குக் காவலாக ஒவ்வொரு ஆயுதமும் ஒவ்வொருவரும் ஏந்தி மேளத்துடன் கலையாடி காவல், புரியும் நிகழ்வு அற்புதமான காட்சி வர்ணிக்க முடியாது. அந்தப் பண்டங்கள் யாவற்றையும், புதுப்பானையையும் கோவிலடிக்குக் கொண்டுவந்தவுடன் சூலமானது, கோவில் மூலஸ்தானத்திற்கு முன்னோக்கி வெளியிற் கொண்டுவந்து சூலம் நாட்டப்படும்.

பின்பு கொண்டு வந்த கும்பமும் அதில் வைத்து; பின் பானைகள் அங்கு வெள்ளை சீலைகள் விரித்துவைத்து, அதில் ஒழுங்கு முறைப்படி எடுத்து; முதல் எடுத்த வழுந்தை நாசா வழுந்துப் பள்ளத்திற்குக் கொண்டுசென்று தண்ணீர் வரப்பண்ணி; அந்தத் தண்ணீர் [illegible] பெறும் காட்சி அற்புதமானது. அந்த நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது ஏதாவது ஒரு திசையில் தீப்பிளம்பு தோன்றி ஏழு நிறத்ததாகக் காட்சி தரும். பொங்கல் முடிந்தவுடன் மடைகளுடன் பொங்கல் படைக்கப்படும். படையல்களைச் சுற்றி [illegible] கற்பூரம் இட்டு; கலையாடுவார்கள். கலை ஆடிப் பொங்கல் எடுத்தெறிவார்கள். இறுதியாகக் பரிகாவல் மடையில் எடுத்துச் சுற்றி வைத்த இளநீர் வெட்டிக் கழிக்கப்படும். இது நடைபெற்று ஒரு கிழமையின்பின் வரும் வெள்ளிக்கிழமையில் 8ஆம் மடை எனக் கூறுவர். இந்நவதானியம்மூலம் செய்யப்படும் பலகாரம், மோதகம், வடை என்பன படைக்கப்படும்.

செ.சவுந்தரராசா,
வாதரவத்தை, புத்தூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி

### வேண்டும் வரம் அருளும் வீரத்தாய்



இந்துக்களின் தெய்வ வழிபாட்டில் நாச்சிமார் வழிபாடும் முக்கியமானதொன்றாகும். 'நாச்சிமார்" என்னும் சொல் "நீ" என்ற சங்கத்தமிழ் மொழியினின்றும் வந்ததாகும். "நீ" என்பதற்கு "வழிகாட்டுபவள்", "தலைவி" என்றவாறு பொருள் கொள்வர். ஆயினும் "நாச்சி" என்பதற்கு வழிகாட்டுபவள் எனப்பொருள் கொள்ளப்படுவதே சிறப்பானது. நாச்சிமார் தாயாகவும், கன்னியாகவும், கற்புடைய மாதாவாகவும் மக்களாற் போற்றி வழிபடப்படுகின்றாள்.

நாச்சிமார் ஏழு கன்னி நாச்சிமார் எனப் போற்றப்பட்டு "சப்தகன்னிமார்" எனப் பக்தியோடு வழிபடப்படுவதனைக் காண்கிறோம். இத்தெய்வ வழிபாடு இந்துக்களிடையே நீண்டகாலமாக நிலவி வருகின்றது. சோழர்காலத்தின் காட்டூர்க் கல்வெட்டு 'சப்தகன்னிமார்களுக்குத் தனிக்கோயில்' அமைக்கப்பட்ட வரலாற்றைக் குறிப்பிடுகின்றது.

இத்தகைய சிறப்புமிக்க சப்தகன்னிமார் தெய்வவழிபாடு; இலங்கையிலும், குறிப்பாக; யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வெல்லாவெளி ஆகிய இடங்களிற் கோவில்கள் அமைக்கப்பட்டு; பயபக்தியுடன் வழிபட்டு வருவது கண்கூடு.

இந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்துடன் வலிகிழக்குப் பகுதியில் உள்ள புத்தூரில் அமைந்துள்ள வீரவாணி என்னும் கிராமத்திலும் சப்தகன்னிமார் வழிபாடு; தொன்று தொட்டுநிலவி வருவதையும்; இத்தெய்வத்திற்குப் பெருங்கோயில் அமைத்து மக்களால் பூசிக்கப்படுவதும் சிறப்பிற்குரியது. கி.பி 1898க்கு முன்னர் இருந்தே அப்பிரதேசத்தில் வாழ்ந்த சின்னத்தம்பி எனும் தொண்டருக்கு அவர் செய்த முன்னைய நல்வினைப் பயனின் விளைவாக, அன்னையின் திருவருட்கடாட்சம் கைவரப்பெற்று, அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டதன் விளைவாக வேப்பமரத்தடியில் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டு இயற்றப்பட்டது. அதேவேளை அன்னையின் அற்புதங்களின் விளைவாக அவ்வூரும் "வீரவாணி" எனும் நாமத்தைப் பெற்று விளங்கலாயிற்று. பின்னர் கொட்டிலாகச் சிறு கோவிலாக அமைந்து, தற்போதைய வழித்தோன்றலாகிய திருவாளர் நாகலிங்கம் நரவத்தினம் அவர்களின் தயாள குணத்தினால் அன்னையின் அருட்கடாட்சம் கிடைக்கப்பெற்று ஆலயத்தைப் புதுப்பொலிவுடன் நிர்மாணம் செய்து, "தமிழக மன்னன் ராஜராஜசோழன், தான் பெற்ற செல்வங்களை ஆலயங்கள் அமைக்க அர்ப்பணித்தமைபோல, இவரும் தனது செல்வம் அனைத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்தகன்னிமார் ஆலயப் பணிக்கே ஈந்து, இன்று கும்பாபிஷேகம் செய்யும் நிலைக்கு உயர்த்தியுள்ளார்.

இவ்வாறு வேண்டும் வரம் பல நல்கி, காத்தருளம் மாதாவாகிய சப்த கன்னிமார் எனும் அன்னைக்குப் புதிய கருவறைகளுடனான மண்டபங்கள் அமைக்கப்பட்டதுடன், வைரவர், முருகன், பிள்ளையார், சந்தான கோபாலர் ஆகிய தெய்வங்களுக்கும் உரிய நிலைகளை அமைத்து, புதுப்பொலிவு பெற்றிடக் குடமுழுக்குச் செய்யப்படுவது மிகவும் சிறப்புமிக்கதாகும். மேலும், இப்பாரிய திருப்பணிக்கும், திருத்தொண்டிற்கும் காரணமான சான்றோன் திரு. நா.நவரத்தினம் அவர்களுக்கும், அவர்தம் வழித்தோன்றல்களுக்கும், பரிபாலனசபையினருக்கும் வீரவாணி எனும் பதியில் அமைந்திருக்கின்ற சப்த கன்னிமார் அன்னையர் இஷ்ட சித்திகள் அனைத்தும் நல்கி அருள்புரியவும், இவ்வளப்பரிய தொண்டுகள் பெருகி, நோயற்ற நீண்ட வாழ்வை வேண்டியும் பிரார்த்தித்து ஆசிகூறி அமைகின்றேன்.

"ஸர்வ ஜனகா சுகினோ பவந்து"

த.கோபாலகிருஷ்ணன்,
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரவாணி ஸ்ரீ நாச்சிமார் அம்பாள் திருக்கோவில் வரலாறு

**அமைவிடம்**

ஈழத்திருநாட்டின் வடபால் யாழ். தீபகற்பத்தில், வலிகாமம் கிழக்கு நிர்வாக எல்லைக்குட்பட்ட வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் ஆகிய மூன்று பிரதேசங்களும் சந்திக்கும் இடத்தில் நாற்றிசையும் நீரினாற் சூழப்பட்டிருப்பது வாதரவத்தைக் கிராமமாகும். இங்கு தெற்குப் பக்கமாகவுள்ள புத்தூர் - மீசாலை வீதி ஊடறுத்துச் செல்லும் இடம் வீரவாணி ஆகும். இவ்விடத்தில் வீதிக்கு அண்மையில் இருந்து அருள் பாலிப்பதுதான் வீரவாணி சப்த கன்னிமார் அல்லது நாச்சிமார் ஆலயம். உப்பு நீரும், வறட்சியும், கொண்ட இடத்தில் சோலைகள் மிகுந்திருப்பதே அன்னையின் திருவருளுக்குச் சாட்சியாகும்.

**பண்டைய கதை**

1898ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்திற் சோலை மிகுந்த இவ்விடத்தில் இரவு நேரங்களில் ஒளிப்பிளம்பு தோன்றி, பின் ஏழு நிறங்களில் தீப்பந்தமாகத் தோன்றி மறைவதுண்டு. இதனால் இவ்விடத்திற்கு முன்னைய காலத்தில் ஒருவரும் செல்வதில்லை. இவ்வாறே பகலில் மேய்ச்சலுக்குச் செல்லும் மாடுகள் அவ்விடத்திற்குச் செல்லாமல் மிரண்டு திரும்பி வந்து விடும். இவ்விடத்திற் கவனம் செலுத்திய பெரியவரான அமரர் திருவாளர் சின்னத்தம்பி தலைமையிலான குழுவினர் அவ்விடத்தை அணுகிப் பார்த்தபோது மரத்தடியில் கல் ஒன்று இருப்பதனை அவதானித்தனர். இது ஒரு தெய்வச் செயல் என நினைத்து அதற்கு அவ்விடத்தில் விளக்கு வைத்து வழிபடத் தொடங்கினர். இவ்விடத்தில் மேலும் பல அற்புதங்களைக் கண்ட அவர், தனது வயலின் நெல்லினை அறுவடை செய்து வருடம் ஒருமுறை பொங்கி வழிபடத் தொடங்கினார். நெல்லு அறுவடை செய்து, எல்லோரும் ஓர் இடத்தில் சூடு வைத்து, சில மாதங்களின் பின்னர் சூடடிப்பது வழமை. அந்த வருடம் அவ்விடத்தில் தீப்பிளம்பு ஒன்று தோன்றியதால் ஒரு சூட்டைத் தவிர ஏனைய சூடுகள் எல்லாம் எரிந்து சாம்பலாகின. எரிந்து சாம்பலாகிய சூட்டிலுள்ள நெற்கள் எல்லாம் அந்த மீதியாக இருந்த சூட்டிலே இருந்தன. இதனால் அந்நிலப்பரப்பு "சூடு வெந்தான்" என்ற பெயரைப் பெற்றதுடன் அவ்வருடம் முதல் சூடு வெந்தான் என்ற நிலப்பரப்பில் பெறப்பட்ட நெல்லைக் கொண்டு வைகாசி விசாகம் எனும் நாளில் பொங்கி வரத் தலைப்பட்டனர். புதிய கிணறுவெட்டி எடுத்த நீரிற் பொங்கல் பொங்குவது வழமை. அந்த கிணற்றிற்கு நாசா வளந்து பள்ளம் என்று பெயர் பெற்றது. அந்தக் கிணறு பொங்கலுக்கு நீர் எடுத்த பின்னர் வற்றிவிடும். இத்தினத்தைத் தவிர ஏனைய காலங்களில் எவரும் செல்வதில்லை. அவ்விடத்திற்குச் சென்று பார்த்த பெண் அவ்விடத்தில் இரத்தவாந்தி எடுத்து இறந்ததாக எமது மூதாதையர்கள் கூறுகின்றார்கள்.

ஆலய அமைவிடத்திலுள்ள வேப்பமரத்தினைத் தறித்தவர் அவ்விடத்திலே அரவம் தீண்டி இறந்தார். சிறிது காலத்தின் பின் அந்த வேப்பமரத்தினைப் பிளந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கச் சென்றவர்கள் பாம்பு தீண்டி இறந்தார்கள். அந்த வேப்பமரமானது இன்றும் பற்றைக்குள் நடுவே வீழ்ந்த வண்ணம் காணப்படுகின்றது. அவ்வேப்பமரமானது இலை கொட்டாமற் படாதவாறு இன்றும் காணப்படுவதனைப் பார்க்கலாம். வருடம் தோறும் பொங்கல் குளிர்த்திக்கு கொண்டு செல்கின்ற பண்டங்கள் அன்றிரவு எல்லாம் ஒன்று சேர்த்து வண்டியில் ஏற்றிய வண்ணமும், புதுப்பானைகள் கையில் ஏந்திய வண்ணமும் சூடு வெந்தானிலிருந்து கோயிலடி நோக்கி எடுத்துச் செல்லப்படும். அப்பொழுது காவல் தெய்வங்கள் கலையாடும் வழக்கமும் உண்டு. அப்பொழுது கட்டத்தில் ஒருமுறை முன்சென்ற தீப்பிளம்பு ஒன்று சிதறியதால் ஏழுகுன்றுகளாக காட்சியளித்தது. சின்னக்குளம் எனும் இடத்தில் ஏழுகுன்றும் காட்சியளித்தது. ஏழுகுன்று எனும் இடத்தில் சப்த கன்னிமார் பாதம் இன்றும் காணப்படுகின்றது.

அக்காலத்தில் வண்டில்மூலமே வியாபாரம் செய்யும் வியாபாரிகள் அவ்விடத்தைக் கடந்து செல்லும்போது கோவிலை வழிபட்டுத்தான் செல்வார்கள். வழிபடாது சென்றால் விபத்துக்கள் ஏற்படுவதை உணர்ந்துகொண்டனர்.

**ஆலய வளர்ச்சி**

சின்னத்தம்பியின் மகன் வைரவி பிள்ளை என்பவர் காலத்தில் அவரால் சூலம் நாட்டப்பட்டு வழிபட்டும் அவரிற்குப் பின் அவரின் மகனான நாகலிங்கம் தலைமையிலான திருவாளர்கள் குமாரசாமி, தில்லைப் பிள்ளை, பொன்னத்துரை போன்றோர்கள் சேர்ந்து ஓலையால் வேயப்பட்டு பொங்கல் செய்து வழிபட்டனர். பின் நாகலிங்கத்தின் மகனான நவரட்ணம் என்பவர் சிறு வயதிலிருந்து இக்கோயிலில் ஈடுபாடு காட்டி வந்தார். அந்தக் காலப்பொழுதில் அம்பாளினாற் பல அற்புதக் காட்சிகளைக் கண்டிருக்கிறார். சிறுவயதிலிருந்தே தந்தையார் இல்லாத நேரங்களில் அவரின் மகனே கோயிலுக்கு விளக்கு ஏற்றி வழிபட்டு வந்தார். அவ்வப்போது பல நிர்வாக உறுப்பினர்கள் தோன்றி மறைந்தாலும்கூட தனியாக இக்குடும்பமே பராமரித்து வந்தது.

1950ஆம் ஆண்டிற்கு முன்பின்னாகவும் நாகலிங்கம் தர்மகர்த்தாவும், நவரட்ணம் இளைஞராக இருந்த காலத்தில் ஆலய பரிபாலன உறுப்பினராக இருந்த குமாரசாமி, நல்லசேகரம்பிள்ளை, சரவணமுத்து, செல்வரத்தினம் போன்றோர்கள் உறுப்பினராக இருந்து வந்தனர்.

1953ஆம் ஆண்டு ஓலையால் வேயப்பட்ட கொட்டில் நிரந்தர கட்டடமாக மாற்றப்பட்டது. நவரட்ணம் தொழிலின் நிமித்தம் வேறு இடங்களிற்குச் சென்று வரமுடியாமல் இருக்கும் காலங்களில் வெள்ளிக்கிழமைகளிற் பல கஷ்டங்களையும், வேலையிற் பல இடையூறுகளையும், அமைதி இன்மையையும் அனுபவித்தார். இதனால் எங்கிருந்தாலும் வெள்ளிக்கிழமை அவ் ஆலயத்திற்கு வந்து தரிசித்துச் செல்லும் வழக்கம் இவரிடம் ஏற்பட்டது. அவ்வாறு வழிபடாமல் விட்டால் எந்தவொரு காரியமும் சித்தி பெறாது. அப்படி இருக்கும் காலத்தில், தந்தையார் வயோதிபர் ஆக இருக்கும் காலத்தில், இவரைத் தர்மகர்த்தாவாக வைத்து இவருக்கு உதவியாக இராசையா, கனகசபை, அமரசிங்கம், செல்வரத்தினம், தானைய்யா, சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் இயங்கி வந்தனர். 1983ஆம் ஆண்டு அம்மன் அருளால் ஆலயம் புனருத் தாரணம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. 1984ஆம் ஆண்டு ஆலய நிர்மாணம் செய்யப்பட்டது. அப்போது பிராமணர் ஒருவரால் பூசை செய்யப்பட்டது. 1984ஆம் ஆண்டு தை மாதம் அபரபக்க பூர நட்சத்திரம் அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்று 25 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து விசேட பூசைகள் செய்யப்பட்டு வந்தது. நாட்டில் அசாதாரண சூழ்நிலை காரணமாகக் கட்டடங்களில் ஏற்பட்ட சிதைவு காரணமாக இவ் ஆலயத்தை மீண்டும் புணருத்தாரணம் செய்யும் நோக்கு டன் 2008ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20ஆம் திகதி ஆலய தர்மகர்த்தாவின் ஆலோசனைக் கிணங்கவும் பரிபாலனசபை உறுப்பினர் களான:

தலைவர்: மு.பாரதிதாசன்

செயலாளர்: சி.ரவிதாசன்

பொருளாளர்: செ.சவுந்தரராசா

உபதலைவர்: வீ.பிரதீபன் (பிரபா)

உபசெயலாளர்: இ.கோகிலன்

ஆகியோரின் ஆலோசனைக்கிணங்க பரிபாலனசபை அங்கத்தவர்களான நா.இராசையா, நா.கனகசபை, சி.சிவதாசன், சி.கோகிலதாஸன், ஜெ.ஜெசிபன் போன் றோரின் ஆலாசனைக்கிணங்கவும் ஒன் றிணைந்து பாலஸ்தாபனம் செய்து, கட்டடம் முற்றாக இடிக்கப்பட்டுப் புதிய ஆலய அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் இனிதாக நடைபெறும்.

## இறைவனைக் கும்பத்திற் பூஜிப்பது ஏன்

இறைவன் நின்று அருள்பாலிக்கும் இடங்களில் கும்பமும் ஒன்றாகும். பிரதிட்டை, மஹோற்ஸவம், உருத்திரம், ஸ்நபனம், மற்ற சுப காரியங்களிலும், கும்பத்திற் சிவபெருமானை மந்திரம், கிரியை பாவனைகளினால் எழுந்தருளச் செய்து வழிபடலும் ஒரு வகை.

முதல் கலசம் ஒன்றைப் பிண்டம் (உடம்பு) ஆகக்கொண்டு பின்காட்டப் படுவதுபோற் செய்து பூசித்து வழிபடுபவர் அதன் விபரங்களை பின்வருமாறு காண்க.

கும்பவஸ்திரம் – தோல்

சிவந்த நிறம் ஏறப்பூசிய மண் – இரத்தம்

கும்பமாக்கப்பட்ட பொருள் (மண்) – மாமிசம்

கும்பத்தில் நிறைக்கப்பட்ட சலம் – மேதை (நிணம்)

கூர்ச்சம் (தர்ப்பை) – குடுமி (எலும்பு)

சுற்றப்பட்ட நூல் – எழுபத்தீராயிரம் நரம்பு

உள்ளே இடப்பட்ட இரத்தினம்(பொன், புட்பம், ஆகியன)– வீரியம்

செபிக்கப்பட்ட மந்திரம் – உயிர் ( பிராணன்)

ஆசனம் – நெல், அரிசி, எள்ளு, பயறு, உழுந்து, துவரை, கோதுமை

தேங்காய் – தலை

மாவிலை – மயிர் (சடை) எனவும் பொருள்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## புத்தூர் கிழக்கு, வீரவாணி அன்னை நாச்சிமார் சப்தகன்னிகள் மனோன்மணி அம்பாளின்

# திரு ஊஞ்சற் பாமாலை

### காப்பு

ஆனைமுகன் ஆறுமுகனின் அண்ணன்
தொந்தி வயிற்றோன் பந்தமறக் காப்போன்
நாச்சிமார் மனோன்மணியின் நற்றமிழ் ஊஞ்சல் பாட
நயந்திடுவாய் அருள் நலந்தரும் விநாயகனே.

### நூல்

1. சீர்தங்கும் நான்மறைகள் தூண்களாக
நேரிய நல் சிவகாமமே விட்ட மாக
விண்ணோங்கும் கலை ஞானம் கயிறதாக
சிறப்புமிகும் ஸ்ரீச்சக்கரமே பீடமாக
எழில் தங்கும் உருவான ஊஞ்சல் வைகி
ஒளிநல்கு தனமுடைய மனோன்மணித்தாயே
தரு ஓங்கும் வீரவாணியில் விருப்புடன் மேவும்
எழில் அணங்கே சப்தகன்னியம்மா ஆடீரூஞ்சல்

2. அரிய திரு நான்மறையாம் சட்டம் கொண்டு
புந்தி நாடும் ஐந்துபுலன் விட்டம் பூட்டி
அந்த நாற்கரணம் எனும் வடங்கள் மாட்டி
உண்மை மிகும் ஆகமமாம் பலகை ஏறி
உன்னதமாம் நற்பேறெனும் ஊஞ்சலாடி
உத்தம நல் ஆன்மாவுக்கு அருளும் தாயே
பந்தமறப் பகலோனும் இரவோனும் ஒருங்கே மேவும்
வீரவாணி சப்தகன்னியம்மா ஆடீரூஞ்சல்.

3. திருக்கரத்தில் தேமதுரம் ஒலித்தேயாட
பூந்தேக வனப்புடன் காட்சிநல்க
கனற் சடையும் விரிகுழலும் இசைந்தே ஆட
கடைக்கண் நல்க நேத்திர நீரரும்பியாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயக் கமலத்தில் உள்ளிருந்து உள் அருளும் ஆட
மனத்தகத்தே முத்தான உன்உருவம் தோன்ற
விஞ்சு புகழ் வீரவாணி பதியில் மேவும்
வனிதையாம் சப்தகன்னியம்மா ஆடீரூஞ்சல்.

4. முத்தமிழின் ஆதியே உன் முறுவலாட
முடியதனில் நவரத்ன மணியுமாட
வரம் வேண்டும் வனிதையர்க்கு வாரியிடும்
வனப்பான உன் கண்கள் அழகுசெய்ய
கர்ணத்தில் பொற்குண்டலங்கள் அசைந்தேயாட
மங்குல் நிற வடிவழகு மலர்ந்து வர
பழந்தமிழின் வீரவாணி பதியில் மேவும்
அற்புதத் திருவே சப்தகன்னியம்மா ஆடீரூஞ்சல்.

5. இடப வாகனமாட பாதிமதி தானாட
செங்கமலப் பொற்பாதம் சிறந்தேயாட
உந்தன் மணி மார்பினிலே திருமஞ்சனாட
செங்கண்ணில் சார்ந்தமையும் புருவமாட
கன்னியவள் இதழ்களிலே முறுவலாட
நாடிவரும் உன் பக்தர் விழிநீருமாட
விளங்கிடும் வீரவாணி பதியில் மேவும்
எழில் நகையே சப்தகன்னியம்மா ஆடீரூஞ்சல்.

6, செந்தமிழும் சைவமும் ஓங்கும் பதியில்
அகன்ற பரவெளியில் எழில் கொண்டு
துய்யபெரும் முத்தியெனும் உயர்வுதர
வளம் நிறை நாச்சிமார் கோவில்கட்டி
பழந்தமிழ் சைவ குருபரம்பரை
முப்போதும் திருமேனி தீண்டிட
திருவருள் தரும் வீரவாணி பதியில் மேவும்
கோதையாம் சப்தகன்னியம்மா ஆடீரூஞ்சல்.

7. அன்னையாம் மனோன்மணித் தாயே
மலரடியை எந்நாளும் துதிக்கும் அன்பர்
தூய தம் வாழ்வில் என்றும் துலங்கிடுவர்
பக்குவமாம் உன்பாதம் போற்றும்
பரிபக்குவராம் உன் அடியவர்க்கு
சித்தம் கொண்டு அருள் செய்யவே
பங்கம் சூழ் வீரவாணி பதியில் மேவும்
எழிற்றேவி சப்தகன்னியம்மா ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஆதிநாயகன் அரனாட அனலுமாட
மாலயனோடு தண்மை நிறை புனலுமாட
சித்தம் மிகுந்த சக்தியின் பக்தராட
அகத்திற்கு அம்பாலான அண்டமாட
முத்தமிழும் ஆட கவிதரும் புலமையாட
முத்தான உன்பதத்தில் மூவுலகும் அசைந்தாட
வித்தகர் வாழ் வீரவாணிப் பதியில் மேவும்
அலகிற் கலையுடையாள் சப்தகன்னியம்மா ஆடீரூஞ்சல்

9. துணை வேண்டி ஆளுடைய பிள்ளை கதறியழ
உன்கரத்தால் பால்கொடுத்த அன்புத் தாயே
பொய்யிருட்டில் அகப்பட்ட பங்கயனுக்கு
அக இருள் கெடுத்து ஆண்ட பாலகனை
அயில் கொடுத்து ஆண்ட கனகமுலையாளே
நாளும் உன் பதப்பூசை காணச் செய்தாய்
நாற்றிசையும் புனலோங்கும் வீரவாணி மேவும்
நாச்சிமாரே சப்தகன்னியம்மா ஆடீரூஞ்சல்.

10. திருமாங்கல்யம் தரும்தாயே ஆடீரூஞ்சல்
மழலை வரம் உகந்தவளே ஆடீரூஞ்சல்
முறுவலால் முகமலர்ந்து முத்தி தந்த
ஜகத்தின்பம் தருதாயே ஆடீரூஞ்சல்.
அரிய நற் கல்வியொடு செல்வம் வீரம்
சிறந்திடவே, காப்பவளே ஆடீரூஞ்சல்
நிலைக்கும் சைவம் கொண்டுற்ற வீரவாணி மேவும்
மாதாவே சப்தகன்னியம்மா ஆடீரூஞ்சல்.

## வாழி

சைவகுரு பரம்பரையோர் நீடு வாழி
நாச்சிமார் நயந்த தொண்டா இனிது வாழி
தூய சைவம் ஓங்கும் பதி வீரவாணி வாழி
வனிதையர்க்கு வனப்பான கற்பு நெறி வாழி
மதியும் ஞாயிறும் மாண்புடன் ஒருங்கிசைந்து
மங்கலத் தோற்றம் பெறும் இப்பதியில் நிலைபெறும்
நாச்சிமார்த்தாயே நீ வாழி வாழி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

வீரவாணி வாழும் தேவியே எச்சரிக்கை
வீரத்தமிழின் நாயகியே எச்சரிக்கை
ஐங்கரனைப் பெற்ற அன்னையே எச்சரிக்கை
ஐம்புலன் வழிச் செல்லா தாண்டிடுவாய் எச்சரிக்கை
அழகிய ரிஷப வாகினியே எச்சரிக்கை
அழகு நிறை மனோன்மணியே எச்சரிக்கை
உலகெலாம் உவக்கும் உத்தமியே எச்சரிக்கை
உணர்வுக்கரிதான மலைமகளே எச்சரிக்கை
சதாசிவ மூர்த்த பார்வதியே எச்சரிக்கை
சச்சிதானந்த சொரூபியே எச்சரிக்கை
சங்கரியாம் சப்தகன்னியம்மா எச்சரிக்கை.

## பராக்கு

அறங்கள் வளர்த்த அன்னை பராக்கு
மறங்கள் மாற்றிடும் மனோன்மணி பராக்கு
பழவினைகள் தீரம்மா தாயே பராக்கு
பச்சைநிற பார்வதியே அம்மா பராக்கு
மங்கலம் நிறைப் மங்கல ரூபியே பராக்கு
மாங்கல்யம் தந்த உத்தமியே பராக்கு
தக்கன் மகளாய்ப் பிறந்தாய் பராக்கு
தேன் மொழியாள் கோமள வல்லியே பராக்கு
மூவுலகம் முச்சுடருமானவளே பராக்கு
மாதர் தம் கற்புநெறி காப்பாய் பராக்கு
உலகெலாம் ஈன்றெடுத்த தாயே பராக்கு.

## லாலி

சீர் உறு நவமணி தேவியே லாலி
நீர் உறு சடையோன் தேவியே லாலி
காருறு சடை கொண்ட ரூபியே லாலி
ஆருறு அறம்தனை வளர்ப்பாளே லாலி
வாருறு வனமுலையாபற் பால்கொடுத்தாய் லாலி
பாருறு பல உயிரும் படைத்தவளே லாலி
திருவுறு நவசக்கிதயானவளே லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவுறு நான்மறையின் மூலமே லாலி
கருவுறும் உயிர்க்கருளும் கலைமகளே லாலி
தருவுறும் தண்மைமிகு எழில் கொண்டுற்ற
வீரவாணி சப்தகன்னியம்மா லாலி லாலி.

## மங்களம்

சப்தகன்னி மனோன்மணிக்கு மங்களம் - நல்ல
அகண்ட பரிபூரணிக்கு மங்களம்
பரந்த இடபவாகனிக்கு மங்களம் - திரு
மாங்கல்ய தாரணிக்கு மங்களம்
நாச்சிமார் அன்னைக்கு மங்களம் - நல்ல
பச்சை நிறம் கொண்டவர்க்கு மங்களம்
மாதர்குல மாணிக்கமே மங்களம் - பேசும்
கற்புநெறி உவந்தார்க்கு மங்களம்
வித்தகியாம் சங்கரிக்கு மங்களம் - உத்தம
பத்தினியாம் வித்தகிக்கு மங்களம்
ஈஸ்வரியாம் கன்னிகைக்கு மங்களம் - பரி
பூரணியாம் நாச்சிமார்க்கு மங்களம்.

ஆக்கம்: சைவப்புலவர், இலக்கியச் செல்வர்
சிவஸ்ரீ இரத்தின சபாபதிக்குருக்கள் திருமாறக் குருக்கள்,
ஆசிரியர், வியாபாரிமூலை, பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபிராமிப் பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

கள்ளவாரணப் பிள்ளையார் காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத் (து )உமைமைந்த னேஉல (கு) ஏழும் பெற்ற
சீரபி ராமிஅந் தாதிஎப் போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே !

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பணிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங் கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ (து)அறிந்தனமே

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குற வாய மனிதரையே

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும்புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு) அமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே

சென்னிய(து)உன் பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னிய(து) உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடிய முறைமுறையே
பன்னிய(து) என்றும்உன் றன்பர மாகம பத்ததியே

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடி யாய் சிந்துரானை சுந்தரியே

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத் தாள் என் கருத்தனவே

கருத்தன எந்தைதன் கண்ணன் வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின் பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம் மேவந்தென் முன் நிற்கவே

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து) உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளே உமையே இமயத்(து)
அன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே.

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடி(வு) உடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணாரவிந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம் எம்பி ரான்முடிக் கண்ணியதே.

கண்ணிய(து) உன்புகழ் கற்ப(து) உன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பாதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏ(து) என் அம் மேபுவி ஏழையும் பூத்தலளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றொர்தேய்வம் வந்திப்பதே.

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில் உன்னைச்
சந்திப் பவர்க்(கு) எளிதாம் எம்பிராட்டிநின் தண்ணளியே

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்செல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்க ளாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவள விற்(கு) அள வான(து) அதிசயமே.

அதிசய மான வடி(வு) உடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனை சுந்தர வல்லி துணைஇரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே.

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள்திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே.

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள் உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே.

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
பிடியே மறையின் பரிமள மேபனி மால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்(து) இங்(கு) இனிப்பிற வாமல்வந்(து)
[ஆண்டுகொள்ளே

கொள்ளேன் மனத்தில்நின் கோலம் அல் லா(து) அன்பர் கூட்டந்
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு) [தன்னை
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே.

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான்மற வாமல்நின்(று) ஏத்துவனே

ஏத்தும் அடியவர் ஈரே முலகினை யும்படைத்தும்
காத்தும் அளித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கேமணம் நாறும் நின்தாள் இணைக்(கு) என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே.

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத் (து) அழுக்கைஎல் லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே.

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே

அன்றே தடுத்(து) என்னை ஆண்டுகொண் டாய்கொண்ட(து)
அல்லவென்கை
நன்றே உனக்(கு)இனிநான் என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேஎன் உமையவளே.

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்(கு)
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமயங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே.

ஆசைக்கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல்பட இருந் தேனைநின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே.

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்(து) அஞ்சல் என் பாய் அத்தர் சித்தம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே (எல்லாம்
உழைக்கும் பொழு(து) உன்னை யேஅன்னை யேஎன்பன் ஓடிவந்தே

வந்தே சரணம் புகும் அடி யாருக்கு வான் உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

திங்கட் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங்கக் கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே.

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம்செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்(து)
இருளேதும் இன்றி ஒளிவெளி யாகி இருக்கும் உன்றன்
அருளே(து) அறிகின்றிலேன் அம்புயா தனத்(து) அம்பிகையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே.

பவளக்கொடியில் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே.

ஆளுகைக்(கு) உன்றன் அடித்தாமரைகள் உண்(டு) : அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்றன் விழியின் கடையுண்டு; மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறை நின்குறை யேஅன்று; முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில் லான் பங்கில் வாள்நுதலே.

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணிய எம்பெரு மாட்டியைப்பேதைநெஞ்சில்
காணுதற்(கு) அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்(கு) எண்ணியஎண்ணம் அன்றோ? முன்செய் புண்ணியமே.

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியம் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்த தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேய்பத்ம பாதம் பதித்திடவே

இடங்கொண்டு விம்மி இணைகொண்(டு) இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்(டு) இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே.

பரிபுரச் சீறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்(து) இருந்தவளே.

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறை வியும் ஆம்
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு செய்தே

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய்தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே.

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடு வே கிடந்து சுடர்கின்றதே

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ?
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப் போது வளைக்கை அமைத்(து)
அரம்பை அடுத்து அரிவையர் சூழவந்(து) அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்து இசைவடி வாய்நின்ற நாயகியே.

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்
றாயகி யாதி உடையாள் சரணம் அரணநமக்கே.

அரணம் பொருள் என்று அருள் ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன்(று) அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சாரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய் தார் இந்த வையகத்தே

வையம் துரகம் மதகரி யாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள் அடித் தாமரைக்(கு) அன்புமுன்பு
செய்யும் தவம்உடை யார்க்குள வாகிய சின்னங்களே.

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்ய பட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா(து) ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றிலையே.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்(து) இவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற்பாள் என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப் பொருள் அறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே.

ஐயன் அனந்த படியிரு நாழிகோண்(டு) அண்டம் எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஓடுவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மேய்யருளே.

அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும் அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே.

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்(கு) அலர் ஆகநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யார் அடி யார்பெற்ற பாலரையே.

பாலினும் சொல் இனி யாப்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்க நின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே.

நாயேனை யும் இங்(கு) ஒரு பொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னைஉள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கைச்சியே.

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் அலரும் எப் போதும் என் சிந்தையதே.

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றில் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்(கு) அன்பு பூண்டுகொண்டேநின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில முந்திசை நான்கும் ககனமுமே

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிசெம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே.

தோத்திரம் செய்து தொழுமின் போலும்நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி யூறொளி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே

தனந்தரும் கல்வி தரும்ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கணகளே.

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மணகளிக் கும்பச்சை வண்ணமுமாகி மதங்கர் குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழிவுற்று நின்றநெஞ்சேயிரங் கேலுனக்(கு) என்குறையே.

என்குறை தீரநின்(று) ஏத்துகின் றேன் இனி யான்பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வைரவர் ஏத்தும் பொழு(து) எமக்கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு) ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே.

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே.

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை (மெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பைரவியே.

பைரவி பஞ்சமி பாசாங் குசபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள்செப்புவரே.

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே

விழிக்கே அருளுண்(டு) அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு)அவ் வழிகிடக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே

கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள்ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் என(து) என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றி லேன்என் கண்நீவைத்த பேரளியே

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ங னேமறப் பேன்நின் விரகினையே.

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்க மலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர் எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவளே.

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங்(கு) என்னைஇனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே.

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே.

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தாழ்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாலும் பராபரையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமென்று உனையடைந் தேன்தமி யேனும்உன் பக்தருக்குள்
தரமன்று இவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யாள்இடப் பாகம் சிறந்தவளே

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போ(டு) உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியளே.

மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம்தருமே.

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன் அவர் போனவழியும் செல்லேன்
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே

நகையே இகிதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகில்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே

விரும்பித் தொழும் அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால் அபி ராமி சமயம்நன்றே.

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவ(து)
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்(று) அழித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே.

கோமள வல்லியை அல்லியந் தாமரைக்கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமள மேனிச் சகலக லாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறி யாமடப் பூங்குயிலே

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்(கு) அன்று இமவான் அளித்த கனங்குழையே

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்எப் போதும் உதிக்கின்றவே.

**நூற் பயன்**

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்(கு)ஒருதீங்கில்லையே

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு இலங்கை விபுலானந்தா இசைநடனக் கல்லூரியின் ஆசிரிய மாணவி சிவஞானசுந்தரஐயர் மேகலா
- நாயன்மார்க்கட்டு -



சர்வபோதகாசிரியர்களுடன் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்



சர்வபோதகாசிரியர்களுடன் கும்பாபிஷேகப் பிரதமகுருவிற்கு. 'கும்பாபிஷேக சிவாகம கிரியா திலகம்' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லலிதாம்பிகை

# நவரத்தின மாலை

ஞான கணேசா சரணம் சரணம்
ஞான ஸ்கந்தா சரணம் சரணம்
ஞான ஸத்குரு சரணம் சரணம்
ஞானா னந்தா சரணம் சரணம்

## காப்பு

ஆக்கும்தொழில் ஐங்கரனாற்றநலம்
பூக்கும் நகையாள் புவனேஸ் வரிபால்
சேர்க்கும் நவரத்தினமாலையினைக்
காக்கும் கணநா யகவா ரணமே!
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெயஓம் லலிதாம்பிகையே (மாதா)

## வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்க்
கண்மூடி நெடுங் கனவான தவம்
பெற்றும் தெரியார் நிலையென்னில் அவர்
பெருகும் பிழையென் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
பகைவர்க் கெமனாக எடுத் தவளே
வற்றாத அருட் சுனையே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

## நீலம்

மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக் குவையே சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலத் திருமே னியிலே நினைவாய்
நினை வற்றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரி வருவாய் வருவாய்!
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

## முத்து

முத்தே வருமுத் தொழிலாற் றிடவே
முன்னின் றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவா ஸினியே சரணம்
தத்தே றியநான் தனயன் தாய்நீ
சகா தவரம் தரவே வருவாய்
மத்தே றுததிக் கிணை வாழ் வடையேன்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

## பவளம்

அந்தி மயங்கிய வானவி தானம்
அன்னை நடம் செய்யும் ஆனந்தமேடை
சிந்தை நிரம்ப வளம்பொழி வாளோ
தேம்பொழி லாமிது செய்தவ ளாரோ
எந்தை யிடத்து மனத்தும் இருப்பாள்
எண்ணுப வர்க்கருள் எண்ணமி குத்தாள்
மந்திர வேத மயப்பொரு ளானாள்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

## மாணிக்கம்

காணக் கிடையாக் கதியா னவளே
கருதக் கிடையாக் கலையா னவளே
பூணக் கிடையாப் பொலிவா னவளே
புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித் திருநா மமும் நின் துதியும்
நவிலாதவரை நாடா தவளே!
மாணிக்க ஒளிக் கதிரே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதிஜதி லயமே இசையே சரணம்
அரஹர சிவஎன் றடியவர் குழும
அவரருள் பெற அரு ளமுதே சரணம்
வரநவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

## கோமேதகம்

பூமே வியநான் புரியும் செயல்கள்
பொன்றாது பயனும் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக் தியெனத்
திடமாய் அடியேன் மொழியுந் திறமும்
கோமே தகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே தருவாய் தருவாய்
மாமே ருவிலே வளர்கோ கிலமே
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே! (மாதா)

## பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கனி பதும
ராகவி காசவி யாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணி
சாம்பவி சந்த்ர கலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத சொரூபிணி நித்யகல் யாணி
மஞ்சுள மேரு ச்ருங்க நிவாஸினி
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே. (மாதா)

## வைடூரியம்

வலையொத்த வினை கலையொத்த மனம்
அருளப் பறையாற் றொளியொத் தவிதால்
நிலையற் றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலையற் றசைவற் றநுபூ திபெறும்
அடியார் முடிவாழ் வைடூரியமே
மலையத் துவசன் மகளே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே. (மாதா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பயன்

*எவர் எத் தினமும் இசைவாய் லலிதா*
*நவரத் தினமாலை நவின் றிடுவார்*
*அவர் அற்புதசக் தியெலாம் அடைவார்*
*சிவரத் தினமாய்த் திகழ்வா ரவரே.* (மாதா)

# குங்குமத்தாய்

## நாமாவளி

*மங்களக் குங்குமத் தாயே!*
*பொங்கும் மங்களம் தருவாயே!*

*குங்குமத்தை அணிந்திருக்கும் தாயே என்*
*குறைகளைத் தீர்க்க வருவாயே*
*மஞ்சளையும் கொண்டிருக்கும் தாயே, இங்கு*
*மங்களமாய் வந்திருப்பாய் நீயே!*

*நெய்விளக்கு ஏற்றி வைத்தேன் தாயே- இங்கு*
*நித்தமென்னைக் காத்திடுவாய் - நீயே*
*கைவிளக்காய்த் துணையிருப்பாய் தாயே - என்*
*கவலைகளைப் போக்கிடுவாய் நீயே!*

*மாலை ஒன்று கட்டி வைத்தேன் தாயே - உன்*
*மனதை மட்டும் எனக்கருள்வாய் நீயே*
*பால் பழங்கள் நான் படைத்தேன் - தாயே*
*அதன் பலனை எல்லாம் எனக்களிப்பாய் நீயே!*

*தேடித்தேடி அலைந்திருந்தேன் தாயே - உன்*
*திருவருளைக் காட்டிடுவாய் நீயே*
*பாடி அழுது ஏங்குகிறேன் தாயே - இந்தப்*
*பாலன் முகம் பார்த்தருள்வாய் நீயே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி துதி

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக்கொழிக்குங் கவிவாணர்நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம் அடைக்கலமே.

**- தேசிக விநாயகம்பிள்ளை**

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்,
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்,
உள்ளதாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள் - வெள்

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத்தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள். - வெள்

**பாரதியார்**

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

**- காளமேகப் புலவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடமுழுக்கு விழா



குடமுழுக்கு விழா என்பது ஆலயங்களில் நிறுவப்படும் திருவுருவில் கருணையே உருவாகும் படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே, ஆகிய கும்பாபிஷேகத்தை குடமுழக்கு என்றும் அழைப்பர். கும்பாபிஷேகம் நான்கு வகைப்படும் அவையாவன.

அ) ஆவர்த்தனம்
ஆ) அநாவர்த்தம்
இ) புனராவர்த்தம்
ஈ) அந்தரிதம்

என வகைப்படும். ஆன்மாக்களாகிய நாம் தனுவாகிய சரீரத்தைக்கொண்டு சிவசாஸ்திர உணர்ச்சியால் நல்லறிவு ஏற்பட்டு புதிப்புண்ணியமாகிய கும்பாபிஷேகத்திற் பங்கு பற்றித் தரிசித்தல் ஆகிய கடமையாகும். ஒவ்வொரு கிரியைகளையும் தரிசித்துப் பங்கு பற்றுவதாற் பெரும் பயனுண்டு.

திருக்கோயில்களைப் பழைய சிறப்புடன் இருக்கச் செய்தலாகிய கும்பாபிஷேகம் மிகச் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. செய்வோர், செய்விப்போர், வழிபடுவோர் அனைவரும் நன்மை பெறுவர். மக்கள் நாள் தோறும் செய்துவரும் வழிபாட்டில் ஏற்படும் தவறுகள் மகோற்சவத்தில் ஏற்படும் தவறுகள் கும்பாபிஷேகத்திலும் தீரும். எனவே கும்பாபிஷேகத்தை "பெரும்சாந்தி" எனவும் "குடமுழுக்கு" எனவும் சொல்வர்.

சைவக் கிரியைகள் எல்லாம் மந்திரங்கள், கிரியைகள், பாவனைகள் என்பவற்றாற் செய்யப்படுகின்றன. இவைகள் கும்பாபிஷேகத்தில் இன்றியமையாதவை. கும்பாபிஷேகத்தில் வைக்கப்படும் கும்பங்கள் சர்வசக்தி ஸ்வரூபமான சர்வ தீர்த்தங்களுடைய சிவஸ்வரூபமாகும்.

கும்பாபிஷேகத்தில் இடம்பெறும் கிரியைகள் தனபூஜை, அனுக்ஞை, பிரவேச பலி, வாஸ்து சாந்தி, ம்ருத்சங்கிரணம், ஆச்சார்ய பூஜை, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், பூதசுத்தி முதலியனவாகும்.

தனபூஜை என்பது புண்ணியவசத்தாற் பெறப்படும் திரவியங்களைச் சிவார்ப்பணம் செய்து கும்பாபிஷேகத்திற்குப் பயன்படுத்தல்.

அனுக்ஞை என்பது உத்தரவு பெறுதல் ஆகும். நல்வழியிற் பெறப்பட்ட திரவியத்தைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வதற்கு இறைவனிடம் அனுமதி கேட்டல் ஆகும். துர்தேவதைகளைப் பூஜித்துப் பலி கொடுத்து வேறு இடத்திற்குச் செல்லவும் இறைவனை இருத்த வேண்டியுள்ளது எனவும் அவர்களைத் திருப்திப்படுத்தலாகும்.

வாஸ்து சாந்தி என்பது பூமிக்கு அதிபதியான பிரமனைப் பூஜித்து வாஸ்து புருஷனின் உபாதை இல்லாதிருக்க அப்புருஷனைக் காவல் புரியும் தேவதைகளுக்குச் செய்யும் பூஜை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்ருத்சங்கிரணம் என்பது மண்ணெடுத்தல். பூமியையும், திக்பாலகர்களையும் வணங்கி, அனுமதி பெற்றுக் கிரியை செய்வதற்கு வேண்டிய மண்ணை வெட்டி யெடுத்தல் ஆகும்.

ஆச்சார்யபூஜை என்பது குருவிற்கு சகல உபசாரங்கள் செய்து இச்சிவ கைங்கரியத்தைச் செய்து பக்தர்களை இறை அனுக்கிரகத்திற்குப் பக்தர்களைத் தகுதியாக்க வேண்டும் என்று வழிபடுதல் ஆகும்.

அங்குரார்ப்பணம் என்பது நெல் முதலான தானியங்களை எடுத்து பாலில் ஊறவிட்டு சந்திரனை வணங்கி உலக நன்மையின் பொருட்டு பயிர் வளர்த்தல்.

ரக்ஷாபந்தனம் என்பது எல்லாக் கருமங்களிலும் அசுத்தம் நீக்கி எடுத்த காரியங்களை இடையூறு இன்றி முடிப்பேன் என்ற உறுதியுடன் வாகீஸ்வரியின் நாடியில் உண்டானதாகப் பாவித்து நாகராஜனை வழி பாடு செய்வதாகும்.

பூ சுத்தி என்பது ஐம்பூதங்களையும் இவை சம்பந்தமான ஆத்மாக்களையும் சுத்தப்படுத்தல் ஆகும்.

இக்கிரியையின்பின் கும்பஸ் தாபனம், யாகசாலையில் பிரவேசம் செய்து ஹோமங்கள், பூஜைகள் நடாத்தப்படும். மூர்த்திகளுக்கு தானிய வாசம், ஜலவாசம் இடம்பெற்று அஷ்டபந்தனம் என்ற மருந்து சாத்தி எண்ணெய்க்காப்பு, பிரம்பசுத்தி என்பன செய்யப்படுகின்றன.

சகல உபசாரங்களுடன் யாகசாலையிற் பிரதிஷ்டை செய்யப்பட்ட கும்பங்களைப் பூஜை செய்து குறித்த முகூர்த்த நாளில் மேளவாத்திங்கள் முழங்க மந்திர உச்சாடங்களுடன் வீதிவலம் வந்து அந்தந்த மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்யப்படும். அதன் பின் தொடர்ந்து 45 நாட்கள்வரை விசேட அபிஷேகம் செய்து ஈற்றிற் சங்காபிஷேக பூஜை செய்து மண்டல பூஜை பூர்த்தியாகும்.

"உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையப் போர்க்கும்
இருஞ்சாக்கியர்கள் எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலிச்சரத்தான்றன்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பவாய்"

என்ற திருஞானசம்பந்தரின் வாக்கியத்திற்கேற்ப சிறப்பினை உடைய கும்பாபிஷேகத்தினைத் தரிசித்து, பங்குபற்றுவதன் மூலம் சிவபோக நித்தியானந்த மோட்சமும், சுபீட்சங்களும் பெறுவார்களென்பது தெளிவாகும்.

இத்தகைய சிறப்பும் புண்ணிய பலமும் கொண்ட கும்பாபிஷேகம் வாதரவத்தையின் வீரவாணியில் சப்த கன்னிமார் ஆலயத்தில் நிகழவிருப்பதாற் கிராமமக்கள் சகல சம்பத்துக்களும் பெறுவீர்களாக. மற்றும் மகா கும்பாபிஷேகப் பெருவிழாக் காட்சியுடன் உலகத்திலே வாழ் அனைத்துப் பெருமக்களும் துன்பம் நீங்கி அமைதியான வாழ்வு பெறும் வண்ணம் அன்னையின் திருமலர், பாதங்களை வழுத்தி, இந்தக் கும்பாபிஷேக நிகழ்ச்சியினால் மலரும் சப்த கன்னிமார் திருவருள் ஓசை என்னும் மலரில் அமைந்துள்ள அரும்பெரும் விஷயங்களை வாசித்து உணர்ந்து சைவ உலகம் தழைத்தோங்க வேண்டும் என்று எல்லாம்வல்ல அன்னை சப்தகன்னிமார் அம்பாளின் பாதாரவிந்தங்களைச்சிரம் தாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன்.

பா.வினோஷா,
வாதரவத்தை, புத்தூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதறுதேங்காய்



திரிபுர தகனத்தின் பொருட்டு எம்பெருமானான சிவபெருமான் இரதத்தின் மேல் ஆரோகணித்தார். அப்பொழுது இரதத்தின் உருளைகள் நகராது நிற்பதைக் கண்ட நாரதர். துதிக்காமல் இருப்பவர்களையெல்லாம் துதிக்க வைக்கும் தும்பிக்கையானை நினைக்காத காரணந்தான் இது என்று உணர்ந்தார். விநாயகரை அடைந்து வேண்டினார். என்னை முழுமுதற் கடவுள் என்று முதன்மையை எனக்குக் கொடுத்த பரமசிவனே என்னை நினைக்காமல், துதிக் காமல், திரிபுரதகனம் செய்யமுடியுமா? இந்த மகாதவத்தைச் செய்தவரை மன்னிக்க முடியாது. இதற்குப் பிராயாச் சித்தமாக என் அப்பனின் தலையைக் கொண்டுவந்து என்முன்னே சிதற அடி என்று விநாயகர் கூறினார். இதனை எம்பெருமானிடத்திலே சென்று நாரதர் விண்ணப்பிக்க, அவர் தம் திருக்கரங்களை நீட்டிய உடன் மூன்று கண்களையுடையதும் ஜடா பாரத்தோடும் கூடிய தேங்காய் உற்பவித்தது அதுமுதல் விநாயகருக்குச் சிதறு தேங்காய் அடிக்கும் வழக்கம் ஏற்பட்டது. விநாயகரைத் தவிர வேறு எந்த சுவாமிக்கும், எந்தச் சந்தர்ப்பத்திலும் சிதறு தேங்காய் அடிப்பது: மகா தவறு.

**அபிடேகத்திற்கு இளநீர் வெட்டுதல்**

கோவிலில் சுவாமிக்கு அபிடேகம் செய்ய, அல்லது வேறு எந்த நல்ல காரியத் திற்கும் மேற்பக்கத்தாலே வெட்டி இளநீர் எடுக்கவேண்டும் (அடிப்பக்கம் அபரக்கிரியை களுக்கு)

தினேஷா பாரதிதாசன்

1. இல்லை என்று ஒரு போதும் சொல்லாதே,
   உன்னால் இயலாது என்றும் ஒரு நாளும் எண்ணாதே.
2. ஒரு மலரில் முள்ளும் உண்டு,மணமும் உண்டு, ஒரே
   மனிதனிடம் குறையும் உண்டு, குணமும் உண்டு.
3. பணத்தை நாம் ஆளவேண்டும்.
   பணம் நம்மை ஆளவிடக்கூடாது.
4. பாதை வகுத்தபின் பயந்து என்ன லாபம்?
   பயணம் நடத்திவிடு, கிடைத்திடும் லாபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கிராமத்திலுள்ள இந்து ஆலயங்கள்



எமது கிராமத்திலுள்ள ஆலயங்களில் கேதுவூப்பிள்ளையார் இயமாவில் துர்க்கையம்மன், வாதரவத்தை நாச்சிமார் வீரமணி சப்த கன்னிமார், வீரவாணி நாகதம்பிரான் ஆகிய ஆலயங்களில் ஆகம முறைப்படியும், வாதரவத்தை காளி கோவில், வாதரவத்தை நரசிங்க வைரவர், வீரவாணி ஞான வைரவர், வீரவாணி ஐயனார், பெரிய கொக்கனை அம்மன், தோறணைக் கந்துப்பிள்ளையார் ஆகிய ஆலயங்களில் ஆகமம் சாராது கிராமப் பூசாரிகளாலும் பூசைகள் இடம்பெறுகின்றன. இவற்றின் தனித்தனி வரலாறுகளை எடுத்து நோக்குவோமாயின்.

**கேதுவூர்பிள்ளையார் ஆலயம் :**

இவ் ஆலயமானது கேதுவூப் பகுதியிற் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் சி. வேலுப்பிள்ளை என்பவரின் (நொடிப்பூசாரி) கனவிற் பிள்ளையார் தோன்றி தன்னை எவரும் கவனிப்பதில்லை எனப் பணித்துத் தான் இருக்கும் கொண்டல், வேப்பமரங்களான சோலையையும் காட்டியருளினார். அன்றிலிருந்து அவர் பந்தல் அமைத்து விளக்கு வைத்து வழிபட்டதுடன் குறிசொல்லியும் வந்தார். பிள்ளையாரின் புதுமைகளை எடுத்து நோக்குவோமாயின் பூசாரியாரின் உளத்தூய்மையை சோதிப்பதற்காக வாழைப்பழத்தோலை உள்ளீடாக வைத்து மோதகக் குவியலுக்குள் வைக்கப்பட்ட மோதகத்தைப் பூசாரியார் எடுத்துக் காட்டினார். மேலும் குழந்தை வரம் கேட்ட வே. ஆறுமுகத்தை (கணக்கர்) கோவிலை ஆகம முறைப்படி கட்டுவித்து (1946 இல்) குழந்தை வரத்தை அருளினார். இவ் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவானது சித்திரை மாத அத்த நட்சத்திரத்தை இறுதி நாளாகக் கொண்டு 10 தினங்கள் இடம்பெறுவதுடன்; சித்திரா பௌர்ணமி திருவிழா விசேடமானதாகும். இத்திருவிழாவில் அயற்கிராம மக்களும் 'புலம்பெயர் உறவுகளும் கலந்து சிறப்பிக்கின்றனர்

**வேலன்காட்டு இயமாவில் துர்க்கையம்மன் ஆலயம் :**

இயமாப்பகுதியிலுள்ள அலரி, ஈஞ்சு மரங்களிடையே மண்புற்றில் ஏதோ சிறப்பை கண்ட வ. கந்தையா என்பவர் விளக்குவைத்து வழிபட்டார். ஆனால், இடையில் அப்பணி கைவிடப்பட்டது. சிறிது காலத்தின்பின் வ. பொன்னுத்துரை அவ் இடத்தில் வெள்ளைச் சாறியுடன் தலைவிரி கோலமான ஒரு பெண் தோன்றி மறைந்தமையால் அவ்விடத்தில் விளக்குவைத்து வழிபட்டார். பின்னர் இவரின் புதல்வர்களாலும் அருகில் வசித்த கைலாயபிள்ளை என்பவராலும் பராமரிக்கப்பட்டு வந்தது. 1980களில் பொ. கந்தசாமி என்பவரால் கோவில் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடையிற் கைவிடப்பட்டது. பின்னர் 2007இல் கிருஷ்ணபிள்ளையின் புதல்வர்களாற் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. இவ்வாலய வருடாந்த திருவிழாவானது ஆவணி மாதத்தில் 11 தினங்கள் நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாதரவத்தைக் காளிகோவில்**

இவ் ஆலய தோற்றத்தை எடுத்து நோக்குவோமாயின் வா. நாகலிங்கம் என்பவர் தமது வீட்டிலுள்ள புளியமரத்திற் காளி அம்மனின் காட்சியைக் கண்டு விளக்கு வைத்து வழிபட்டு வந்தார். இவ்வாலயத்தில் விசாகப் பொங்கல் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது.

**வாதரவத்தை நரசிங்க வைரவர் ஆலயம் :**

ஆரம்பத்திற் பூவரசு மரத்தடியிற் கந்தையா என்பவர் வைரவரின் காட்சியை கண்டு விளக்கு வைத்து வழிபட்டார். பின்னர் அருகில் இருந்த தம்பு என்பவரும் இணைந்து செயற்பட்டனர். இவ் ஆலயச் சிறப்பு யாதெனில், பொங்கலன்று பண்ட மடை எடுக்கும் வேப்பமரம் தறிக்கப்பட்டபோது உடனடியாகவே அவ் வேம்பு கிளைவிட்டு வளர்ந்ததுடன் அவ்வேம்பிலிருந்து ஒரு வகைத் திரவம் தொடர்ச்சியாக வடிந்தவண்ணம் இருந்தது. விசாகப்பொங்கல் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**வீரவாணி நாகதம்பிரான் ஆலயம்**

சி. சங்கரப்பிள்ளை என்பவர் தனது வயலில் உள்ள புற்றினை வெட்டும்போது வெள்ளி நிறமான நாகபாம்பு இரண்டாக வெட்டப்பட்டபின்னர் அவை பொருந்திச் சிறிது தூரம் ஓடி மறைந்தமையால் அவ் விடத்தில் நாகதம்பிரான் இருப்பதை உணர்ந்து, விளக்குவைத்து வழிபட்டார். இவ்வாலயச் சிறப்புயாதெனில், நோய் நொடி களில் இருந்து பாதுகாப்புப்பெறும் பொருட்டு பொதுமக்களால் கோழிகள் நேர்த்திவைத்து வழங்கப்படுவதுடன், வீதியாற் செல்லும் பொதுமக்களும் தமது காணிக்கைகளைச் செலுத்தி வருகின்றனர்.

**வீரவாணி ஐயனார் ஆலயம்**

1950களில் வன்னிப்பகுதியில் தொழில்புரியச் சென்ற தி. இராசதுரை என்பவர் அங்கு நோய்வாய்ப்பட்ட நிலையில் ஊருக்கு திருப்பியபின் அவருக்கு ஐயனார் கலை யுருப்பெற்று தாழங்கூடலுக்குள் தனது இருப்பிடத்தை காட்டியதன் பிரகாரம் அவர் அவ்விடத்திற் சூலம் நாட்டி, விளக்கு வைத்து வழிபட்டு வந்தார். ஆரம்ப காலங்களில் இங்கு ஆட்டுக்கடாக்கள் பலியிடப்பட்டு வந்தது டன், தற்போது கோழிகள் பலியிடப்பட்டு வருகின்றதுடன், இவ்வாலயத்தில் விசாகப் பொங்கலன்ற பண்ட மடைக்குரிய பொருட் கள் வைத்திருப்பவர்களின் வீடுகளுக்குக் கலை யாடுவர். பறை, சேமக்கலம் முழங்கச் சென்று பெற்றுக்கொள்ளும் வழக்கம் ஆரம்ப காலங் களிற் காணப்பட்டது.

**வீரவாணி ஞான வைரவர் ஆலயம் :**

சி. சுந்தரலிங்கம், சி. சந்திரசேகரம் ஆகியோர் தமது வீட்டு வேப்ப மரத்தடியில் வைரவரின் தரிசனத்தைக் கண்ணுற்று விளக்குவைத்து வழிபட்டனர். இவ்வாலயத்தில் விசாகப் பொங்கல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

**தோறனைக்கந்து பிள்ளையார் ஆலயம் :**

ஆரம்ப காலத்தில் தோறனைக்கந்துப் பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட முருகேசு என்பவரின் தோட்டத்துக்கு அருகில் இருந்த தாழங்கூடலுக்குள் ஒரு யானை ஓடி மறைந்தமையாலும், பிள்ளையாரின் காட்சி யையும் கண்ணுற்று விளக்குவைத்து வழி பட்டு வந்தார்.

**பெரிய பொக்கனை அம்மன் ஆலயம் :**

பெரிய பொக்கனையில் வசித்த பு. தம்பு என்பவர் தனது வீட்டிலுள்ள வேப்பமரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடியில் அம்மனின் அருள்பெற்று விளக்கு வைத்து வழிபட்டு வந்தார். தற்போது பெரிய பொக்கணை வாழ் மக்களின் பங்களிப்புடன் விசேட தினங்கள் சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக எமது கிராமத்திலுள்ள ஆலயங்களை வெளிக் கொணர வேண்டும் என்ற பேராவலால் கேட்டறிந்த விடயங்களை எழுதியுள்ளேன். இவற்றில் தவறு இருப்பின் மன்னித்தரு ளுவீர்களாக. மேலும், வீரவாணி சப்தகன்னி மார் ஆலய வரலாறு தனியாக குறிப்பிடப்பட் டுள்ளமையால் இங்கு அவ் ஆலய வரலாறு குறிப்பிடப்படவில்லையாகும்.

இ. கோகுலன்,
வாதரவத்தை, புத்தூர்.

## அர்ச்சனைத் தட்டு எதற்காக?

கோயிலுக்கு அர்ச்சனைத் தட்டு கொண்டு போகும்போது நேரே அர்ச்சகர் வாங்குகிறார்; கத்தியால் தேங்காயை உடைக்கிறார்; உடைத்ததையும், பழம் முதலியவைகளையும் சுவாமிக்கு நைவேத்தியம் செய்கிறார்; கர்ப்பூரத்தை ஏற்றிச் சுவாமிக்கு முன் பிடித்து நம்மைத் தரிசிக்கும்படி செய்கிறார்.

அருச்சகர் – ஞானகுரு; கத்தி: திருவருட் சக்தி, கருப்பூரம் – ஞானம், மூர்த்தி – சிவம், தேங்காய் – ஆணவம், பழம் முதலிய மற்றவைகள் – கன்ம, மாயா மலங்கள். எனவே, ஞானாசாரியருடைய ஞானோபதேசத்தினால் திருவருட் சக்தி தோன்றி ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை அழித்து, அவைகளை அர்ப்பணம் செய்ய சிவஞானம் தோன்றும். அந்த ஞானப்பிரகாசத்தினாலேயே சிவத்தை தரிசிக்க வேண்டும். இவ்வாறு இவற்றின் பொருள்களைக் கூறுகின்றனர்.

பழங்கள்: தட்டில் கொண்டுபோன பழங்கள் நறுஞ்சுவைகள் உடையன. அவை பக்தனுடைய நல்வினைப் பயன்களைக் குறிப்பன. அவ்வினைகளையும் இறைவனிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதாம்.

வெற்றிலை, பாக்கு, முகவாசம்: இவை ஆன்மாவைப் பொருந்திய இராசதம், தாமதம், சாத்விகம் என்னும் முக்குணங்களைக் குறிப்பன. இக்குணங்களையும் விட வேண்டும் என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக குருமார்கள் விபரம்

கும்பாபிஷேகப் பிரதம குரு: சிவாகம கிரியா கலாநிதி, "சிவாகம வித்தகர்" சிவஸ்ரீ இ. பாலகிருஷ்ணக் குருக்கள்

ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோவில், உடுப்பிட்டி வடக்கு, கொம்மந்தறை

சர்வ போதகாசிரியர்கள் : சமஸ்கிருத பண்டிதர் சிவஸ்ரீ ச. வேதாரணியக் குருக்கள் - பிரதம குரு, முடிக்கொற்றாவத்தை விநாயகர் ஆலயம்.

கிரியா ரத்தினம், சிவஸ்ரீ பாலபத்மநாதன் குருக்கள், கலட்டி அம்மன் ஆலயம் - கெருடாவில்

சர்வ சாதகாசிரியர்கள் : "சாதக ஞானபானு, "பத்ததி வித்தக சிரோன்மணி"

சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக் குருக்கள், அநுராதபுரம்.

"சாதக இளவரசு"

சிவஸ்ரீ ச. யோகசம்பந்தக் குருக்கள், ஆசிரியர்

கரணவாய் குருக்கள் பகுதி

பிரதமகுரு கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயம்.

ஆலய பிரதம குரு: சிவஸ்ரீ பாலஉருத்திரபாலக் குருக்கள் - வரணி

**மூர்த்திப சிவாச்சாரியார்கள்**

சிவஸ்ரீ ந. ஸ்ரீரங்கநாதக் குருக்கள், மட்டுமாநகர்

சிவஸ்ரீ பா. பாலமனோன் குருக்கள், ஏழாலை

சிவஸ்ரீ சி. மகேந்திரநாதக் குருக்கள், மாயக்கை

சிவஸ்ரீ சி. மகேஸ்வரக் குருக்கள்

சிவஸ்ரீ இ. திருமாறக் குருக்கள், வியாபாரிமூலை

சிவஸ்ரீ இ. பாஸ்கரக் குருக்கள், கெருடாவில்

சிவஸ்ரீ சி. இந்திரராஜக் குருக்கள், துன்னாலை

சிவஸ்ரீ வே. பாலச்சந்திரன் குருக்கள், வல்வெட்டித்துறை

சிவஸ்ரீ சி. உருத்திர மூர்த்திக் குருக்கள், மல்லாவி

சிவஸ்ரீ வ. பாலகுமாரக் குருக்கள், சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஸ்ரீ தி. சுப்பிரமணியக் குருக்கள், கற்பூது

சிவஸ்ரீ க. சிவகுமாரக் குருக்கள், கரணவாய்

சிவஸ்ரீ சிவகுஞ்சிதபாதக் குருக்கள்,

சிவஸ்ரீ ச. பாலசுப்பிரமணியக் குருக்கள், உடுப்பிட்டி

சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள், யாழ்ப்பாணம்.

**உபசாதகர்கள்**

சிவத்திரு சி. ஜதிஸ்வரன் ஐயா (நாயன்மார்க்கட்டு)

சிவத்திரு சி. பிரதீபன் ஐயா (அல்வாய்)

சிவத்திரு சி. ராகுலன் ஐயா (கல்லுவம்)

சிவத்திரு. பா. நரேந்தர் ஐயா (கெருடாவில்)

**யாக சம்ரட்சகர்கள்**

சிவத்திரு ச. கணநாதன் ஐயா (மீசாலை)

சிவத்திரு ஆ. அகிலன் ஐயா (கல்லுவம்)

சிவத்திரு. இ. சண்முகதாஸ் ஐயா (கரணவாய்)

சிவத்திரு இ. கிருபாகரன் ஐயா (கரணவாய்)

சிவத்திரு. பொ. சரவணபவன் ஐயா (உடுப்பிட்டி)

சிவத்திரு சு. சத்தியநாதன் ஐயா (உடுப்பிட்டி)

சிவத்திரு பொ. தவரூபன் ஐயா (கெருடாவில்)

சிவத்திரு. அ. முரளிகிருஷ்ணா ஐயா (கெருடாவில்)

சிவத்திரு. ச. கந்தசாமி ஐயா (மீசாலை)

சிவத்திரு. க. விக்னேஸ்வரன் ஐயா (கெருடாவில்)

சிவத்திரு. வி. ஸ்ரீகரன் ஐயா (அல்வாய்)

சிவத்திரு. பொ. சர்வேஸ்வரன் ஐயா (நாயன்மார்கட்டு)

சிவத்திரு. இ. கணேசலிங்கம் ஐயா (நாயன்மார்கட்டு)

பா.பக்த்,
வாதரவத்தை, புத்தூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில் தர்மகர்த்தா சபையினர்

| 2008ஆம் ஆண்டு தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள் | 2005ஆம் ஆண்டு தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள் |
|---|---|
| தலைவர் மு. பாரதிதாசன்<br>செயலாளர் சி. ரவிதாசன்<br>பொருளாளர் செ. சவுந்தரராசா<br><br>**அங்கத்தவர்கள்**<br>சி. சிவதாசன்<br>சி. கோகிலதாஸ்<br>நா. இராசையா<br>நா. கனகசபை<br>இ. கோகுலன் | தலைவர் மு. பாரதிதாசன்<br>செயலாளர் செ. சவுந்தரராசா<br>பொருளாளர் நா. இராசையா<br><br>**அங்கத்தவர்கள்**<br>நா. சிற்றம்பலம்<br>அ. சிவானந்தம்<br>அ. ரவி<br>ந. திரவியநாயகம்<br>நா. கனகசபை |
| **2002ஆம் ஆண்டு தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள்** | **1999ஆம் ஆண்டு தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள்** |
| தலைவர் ந.இலக்குணராசா<br>செயலாளர் செ. சவுந்தரராசா<br>பொருளாளர் மு. பாரதிதாசன்<br><br>**அங்கத்தவர்கள்**<br>நா. சிற்றம்பலம்<br>க. பொன்னம்பலம்<br>அ. சிவானந்தம்<br>அ. ரவி<br>நா. கனகசபை | தலைவர் செ. சவுந்தரராசா<br>செயலாளர் ந. இலக்குணராசா<br>பொருளாளர் ந. குலதேவராசா<br><br>**அங்கத்தவர்கள்**<br>நா. சிற்றம்பலம்<br>நா. கனகசபை<br>நா. இராசையா<br>அ. ரவி |
| **1996ஆம் ஆண்டு தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள்** | **1993ஆம் ஆண்டு தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள்** |
| தலைவர் மு. பாரதிதாசன்<br>செயலாளர் ந. இலக்குணராசா<br>பொருளாளர் செ. சவுந்தரராசா<br><br>**அங்கத்தவர்கள்**<br>ச. தயானந்தராசா<br>அ. சிவானந்தம்<br>நா. இராசையா<br>நா. கனகசபை | தலைவர் ந. இலக்குணராசா<br>செயலாளர் ந. சவுந்தரராசா<br>பொருளாளர் மு. பாரதிதாசன்<br><br>**அங்கத்தவர்கள்**<br>சந. குலதேவராசா<br>ந. தவநாயகம்<br>நாப. கனகசபை<br>நா. இராசையா<br>அ. ரவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| **1989ஆம் ஆண்டு தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள்** | | **1986ஆம் ஆண்டு தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள்** | |
|---|---|---|---|
| தலைவர் | செ. சவுந்தரராசா | தலைவர் | ந. பரமானந்தராசா |
| செயலாளர் | ந. இலக்குணராசா | செயலாளர் | செ. சவுந்தரராசா |
| பொருளாளர் | ந. குலதேவராசா | பொருளாளர் | ந.இலக்குணராசா |
| **அங்கத்தவர்** | | **அங்கத்தவர்கள்** | |
| நா. சிற்றம்பலம் | | ந. தவநாயகம் | |
| அ. ரவி | | நா. சிற்றம்பலம் | |
| நா. கனகசபை | | நா. இராசையா | |
| அ. சிவானந்தம் | | நா. கனகசபை | |
| **1983 ஆம் ஆண்டு தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள்** | | **1980ஆம் ஆண்டு தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள்** | |
| தலைவர் | ந. யோகராசா | தலைவர் | நா. சிற்றம்பலம் |
| செயலாளர் | ந. பரமானந்தராசா | செயலாளர் | நா. இராசையா |
| பொருளாளர் | செ. சவுந்தரராஜா | பொருளாளர் | ந. யோகராசா |
| **அங்கத்தவர்கள்** | | **அங்கத்தவர்கள்** | |
| நா. கனகசபை | | சி. அமரசிங்கம் | |
| நா. சிற்றம்பலம் | | இ. சின்னராசா | |
| நா. இராசையா | | நா. கனகசபை | |

**ஏழு நற்குணங்கள்**

ஏழ்மையிலும் நேர்மை
கோபத்திலும் பொறுமை
தோல்வியிலும் விடாமுயற்சி
வறுமையிலும் பரோபகாரம்
துன்பத்திலும் தைரியம்
செல்வத்திலும் எளிமை
பதவியிலும் பணிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஞ்ஞான்றும் நன்றி


"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லதை
அன்றே மறப்பது நன்று"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க அதாவது ஒருவன் எமக்கு நன்றி செய்தால் அதனை மறப்பது நல்லதாகாது. ஆனால் ஒருவன் எமக்கு தீமை செய்தால் அதனை அன்றே மறப்பது நல்லதாகும். அத்தோடு எமது நிகழ்வுகள் எதற்கென்றாலும் நன்றி கூறுகின்ற மரபு காணப்படுகின்றது. இந்தவகையில்,

வாதரவத்தை தெற்கு, வீரவாணி சப்த கன்னிமார் அம்பாள் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேறியுள்ளது. கும்பாபிஷேகச் சிறப்பை, வனப்பை, கண்கொளாக் காட்சியைக் கண்டு அடியார்கள் பூரித்தவண்ணம் உள்ளனர். இச் சிறப்புக்குக் காரணமானவர்கள் அனைவரையும் கௌரவித்து, பாராட்டி நன்றி தெரிவிப்பது நம் கடமையே.

சப்த கன்னிமார் ஆலயப் புனருத்தாரண அஷ்ட பந்தன சப்ததச (17) குண்டபக்ஷ மகாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்திப் பெருவிழாவைச் சிறப்புற நடாத்திய சிவாகம வித்தகர் சிவாகம கும்பாபிஷேக கிரியா திலகம் சிவஸ்ரீ இ. பாலகிருஸ்ண குருக்கள் அவர்களிற்கு முதற்கண் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் மூர்த்திய சிவாச்சாரியர் களான ஏனைய (16) குருக்கள் ஐயா அவர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், யாக சம்ரட்சர்களிற்கும், உபசாதகாசிரியர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் சர்வ போதாசிரியர்களிற்கும், சர்வசாதகாசிரியர்களிற்கும் சகல விதத்திலும் முன்னின்று உழைத்த ஆலயப் பிரதம குரு சிவ ஸ்ரீ பாலஉருத்திரபாலன் ஐயா அவர்களிற்கும், எங்களது நன்றியைத் தெரிவிப்பதுடன், அருள் ஆசி வளங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்) அவர்களிற்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் கும்பாபிஷேக தினத்திலன்று நேரடிவர்ண ஒலி பரப்புச் செய்த அறிவிப்பாளர் அவர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், ஒலி, ஒளி அமைப்பு வழங்கியவர்களிற்கும், மங்கள வாத்தியம் வாசித்தவர்களிற்கும், விக்கிரக அமைப்பு, வர்ண வேலைகள், கோப்பிச வேலைகள் ஆலய கட்டுமானம் செய்தவர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் ஆலய புனர் அமைப்பிலி ருந்து இன்றுவரை தோளோடுதோள் கோர்த்து உதவிய ஆலய பரிபாலன சபையினருக்கும், தொண்டர்களிற்கும், மற்றும் அன்றிலிருந்து இன்றுவரை சிவத்தொண்டு செய்தவர்களான நா. கனகசபை, செ. இந்திரகுமார் ஆகியோரிற்கும், சிவசக்தி பந்தல் சேவையினருக்கும், மிகக் குறுகிய காலத்திற் அச்சுப்பதிப்பு செய்துதவிய கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இதில் யாருக்காவது நன்றிகூறத் தவறியிருப்பின் அவர்களுக்கும் நன்றிகூறிக்கொள்கின்றோம்.

நன்றி



ஆதீனகர்த்தா
ஆலயகாப்பாளர்,
பரிபாலனசபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயக் கும்பாபிஷேகப் பணிகளை முன்னெடுத்த குருமார்கள்...



ஆலய ஆதீன கர்த்தாவும், தர்மகர்த்தா சபையினரும்...



ஆலயப் பிரதம குருவும், கும்பாபிஷேகப் பிரதம குருவும், ஆலய உபயகாரர்களும்...



ஆலயப் பிரதம குரு, ஆதீன கர்த்தா அவர்கள் மற்றும் பரிபாலன சபையினரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org